# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, வீர்ஜின், வில்சன் மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ், மிரியம், ஜெயசேகரி-திண்டுக்கல், அனன்சியா மேரி, அருள் மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பவுலின்மேரி, பிலோமினாள் - கும்பகோணம் மேரி மௌரிஸ், ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர், ஆக்னஸ் ரோசாள் - தூத்துக்குடி, ரூபெல்லா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, புஷ்பமேரி, ஜெயமேரி, சலேத்மேரி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், சகாயம் - கடலூர், அமிர்த ராணி, அருள் சீலி.

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், பாத்திமா, ஞானசேகரன், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா,ஜோஸ்பின் மேரி- திண்டுக்கல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், இம்மாக்குலேட், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, மரிய பிரகாசம் - தர்மபுரி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி, தென்னரசு, ஜான் ஜோசப்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. டோம்னா மேரி- கும்பகோணம்
அருட்சகோதரி. பவுலின் மேரி - கும்பகோணம்
திருமதி. A. மேரி - இளையரசனேந்தல்
திரு. சந்தனம் - திருச்சி

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# கண்ணீர்

## பதிப்பாசிரியர் பக்கம்

**ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


ஆகட்டும் இதழின் வாசகர்களே, அன்னை மரியின் பக்தர்களே ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்பினை நினைவுகூர்ந்த நாம் இப்போது உயிர்ப்புக் காலத்தில் நுழைகின்றோம். இந்தக் கல்வாரிப் பயணத்தில் வலியினைத் தாங்க முடியாமல் இயேசு பலமுறை கண்ணீர் விட்டிருக்கலாம், ஆண்டவர் இயேசு படும் துன்பங்களைக் கண்டு அவரது அபிமானிகள் கண்ணீர் விட்டிருக்கலாம். ஆனால் அதையெல்லாம் தாண்டி அன்னை மரியாளின் கண்ணீர் என்பது மிகவும் விலைமதிப்புமிக்க ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

அன்னை மரியாள் ஒரு வீரப் பெண்மணி அதுவும் ஒரு முற்போக்கு சிந்தனையுடைய பெண். அப்படியிருக்க அவள் எப்படி அழுதிருக்க முடியும்? இந்தக் கேள்வியானது நம்மில் எழுவதில் ஆச்சரியமில்லை. அன்னை ஒரு வீரப் பெண்மணிதான் நிச்சயம் ஒரு முற்போக்கு சிந்தனைவாதிதான் ஆனால் அதையெல்லாம் தாண்டி அவளும் ஒரு மனிதப் பெண்மணிதான் அதுவும் ஒரு தாய்தான். மகன் படும் வேதனைக் கண்டு எந்தத்தாய்தான் தன் கண்ணீரை அடக்குவாள் அதில் அன்னை மரியாளும் விதிவிலக்கல்ல.

அன்னையின் கண்ணீர் ஏதோ கல்வாரிப் பயணத்தில்தான் ஆரம்பம் ஆனதா என்றால் நிச்சயம் அதற்குமுன்பே ஆரம்பமானது. என்று கபிரியேல் தூதர் அன்னைக்கு மங்கள வார்த்தை கூறினாரோ அன்றுமுதல் ஆரம்பமானது. தூதர் சொன்னது மகிழ்ச்சியின் செய்தி தானே, அப்படியிருக்க அன்னை ஏன் கண்ணீர் வடிக்க வேண்டும்? துக்கத்தில் மட்டும்தான் கண்ணீர் பிறக்க வேண்டும் என்று கட்டாயம் இருக்கிறதா ஏன் மகிழ்ச்சியில் கூட ஆனந்தக்



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
மீட்பின் திட்டத்தில் ஒத்துழைத்த மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
மீட்பரின் தாய் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
மரியின் ஊழியர் சபை பொன்விழா ஆண்டு - 28
ஆண்டவரின் உயிர்ப்பு நம்மில் - 31
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

கண்ணீர் வரலாமே. ஆனால் அன்னைக்கு வந்தது ஆனந்தக் கண்ணீர் அல்ல வியாகுலக் கண்ணீர்.

திருமணத்திற்குமுன் ஒரு யூதப் பெண் கருவுற்றிருக்கின்றார் என்றால் அதெப்படி யூத சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ள முடியும்? எந்த நேரமும் உயிருக்கு ஆபத்து நேரலாம். யூதச் சட்டத்தின்படி ஒரு பெண் திருமணத்திற்கு முன்பே கருவுற்றிருந்தால் அவள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும் அப்படியிருக்க அன்னை மரியாள் மட்டும் கபிரியேர் தூதரின் வார்த்தையை மகிழ்ச்சியின் செய்தியாக எடுத்திருக்க முடியும். நிச்சயம் கடவுளின் திட்டத்திற்கு ஆம் என்று சொன்ன அன்னை தான் யூத சமுதாயத்திற்கு அஞ்சி ஒளிந்து வாழ்ந்தபோது பலமுறை கண்ணீர் விட்டிருக்க வேண்டும்.

பெத்லகேம் தெருக்களில் ஏதவாது ஒரு சத்திரத்தில் தங்களுக்கு இடம் கிடைக்காதா என்று அன்னை மரியாளும் புனித யோசேப்பும் ஏக்கத்தோடு தேடும் தருணங்கள் நிச்சயம் வலிகள் நிறைந்த கணங்கள். வயிற்றில் குழந்தை, தொடர் அலைச்சல், கால்கள் சோர்ந்து விட்டது உடலில் களைப்பு உள்ளத்திலோ கலக்கம். தாங்க முடியாத அன்னை நிச்சயம் பலமுறை கண்ணீர் விட்டடிருப்பாள். அவள் கண்ணீரை துடைக்க கடவுள் கொடுத்த இடம் அந்த மாட்டுத் தொழுவம்.

அன்னையின் கண்ணீருக்கு முடிவு கிடைத்துவிட்டதா என்றால் இன்னும் கிடைக்கவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆண்டவர் இயேசுவின் பிறப்பிற்கு பின்பு ஏரோது மன்னன் இயேசுவைக் கொலை செய்ய தேடுகின்ற தருணம். இப்போது இந்த ஏரோது மன்னனிடமிருந்து குழந்தை இயேசுவைக் காப்பாற்ற வேண்டும். எந்த எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக இருந்தார்களோ அதே எகிப்து நாட்டிற்கு மீண்டும் ஒருமுறை அகதியாக செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. நேர்மறையாகப் பார்த்தால் இந்த எகிப்து நாடுதான் குழந்தை இயேசுவுக்கு பாதுகாப்பு கொடுத்த நாடாக இருந்தது. இருந்தும் அது அவர்களுடைய சொந்த நாடு கிடையாது. அந்நிய நாட்டில் அகதியாக இருப்பவர்களிடம் சுதந்திரம் இருக்காது, சுதந்திரம் இல்லாமல் வாழ்பவர்கள் அடிமைகள்தான். நான் ஆண்டவரின் அடிமை என்று சொன்ன அன்னை இந்த அந்நிய தேசத்தில் பலமுறை கண்ணீர் விட்டிருப்பாள்.

ஆண்டவர் இயேசுவும் வளர்கின்றார். சரியாக அவருக்கு 12 வயது ஆகின்றது. சட்டத்திட்டங்களையும், மறைநூல்களையும் கொஞ்சம் கொஞ்சமாக படிக்க ஆரம்பித்த நேரமது. 12 வயது நிரம்பிய யூத ஆண்கள் தொழுகைக் கூடங்களுக்கு சென்று மறைநூல் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்வது என்பது வழக்கமான நிகழ்வுதான். அதேப்போல் யூதர்கள் தங்களுடைய திருவிழாக்களைக் கொண்டாட ஒவ்வொரு ஆண்டும் ஜெருசலேம் தேவாலயம் செல்வது வழக்கம். 12 வயது நிரம்பிய சிறுவன் இயேசுவும் அங்கு தன் பெற்றோருடன் செல்கின்றார். அங்கேயே தங்கி விடுகின்றார். பெற்றோருடன் திரும்பி வரவில்லை. அன்னை மரியாள் தேடுகின்றாள் ஏன் கண்ணீரும் வடிக்கின்றாள். இதைவிடக் கொடூரமானது என்னவென்றால் சிறுவன் இயேசுவைக் கண்டுபிடித்தபின் அவன் சொன்ன வார்த்தை 'நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருப்பேன் என்பது உங்களுக்கு தெரியாதா' என்ற வார்த்தை நிச்சயம் அன்னை மரியாளைக் கண்ணீர் விட வைத்திருக்கும்.

**கண்ணீர் கோளைகளின் இயலாமை அல்ல**
**கண்ணீர் கவலைகளின் வடிநீர்**

**குறிப்பு:** மரியின் ஊழியர் சபையின் ஐக்கிய அன்னை மறை மாநிலமானது இந்தியாவில் காலடி எடுத்து வைத்த 50-ம் ஆண்டு பொன்விழாவை ஏப்ரல் 11 -ம் தேதி திருச்சி ஜெகன்மாதா இல்லத்தில் கொண்டாடப் போகின்றது. இந்தப் பொன்விழா ஆண்டின் சிறப்புக் கட்டுரையானது அருட்தந்தை உவரி அந்தோணி அவர்களால் பக்கம் 28-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வாசிப்பீர், வாழ்த்திடுவீர்





எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை. மாதாவின் அருளால் மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜீவா**

எனக்கு திருமணம் முடிந்து 11 வருடங்கள் குழந்தை வரம் இல்லாமலிருந்தது. மாதாவிடம் ஜெபித்தேன். மழலை வரம் கிடைத்தது. மழலை வரம் தந்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சௌம்யா**

நான் 15 வருடமாக உதிரப்போக்கால் அவஸ்தைப்பட்டேன். மருத்துவமனைக்கு சென்றும் பலனில்லை. நான் மாதாவிடம் மனமுருக மன்றாடினேன். எனக்காக தன் மகனிடம் பரிந்துரை செய்து சுகம் கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெனிபா**

எனக்கு வேலை கொடுத்ததற்கு நன்றி. நான் மூன்று பேருக்கு குழந்தை வரம் வேண்டி விண்ணப்பித்தேன். ஒருவருக்கு 11 வருடங்கள் குழந்தை இல்லை, இன்னொருவருக்கு 6 வருடங்கள் குழந்தை இல்லை, இன்னொருவருக்கு 5 வருடங்கள் குழந்தை இல்லை. மாதாவின் பரிந்துரையால் அத்தனைப் பேருக்கும் மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

நான் சோழிங்கநல்லூர் பங்கு. நான் வேலை செய்யும் வீட்டில் உள்ள தம்பதியர்களுக்கு குழந்தை இல்லை. நான் மாதாவிடம் மன்றாடி வளையல் வாங்கிக் கொடுத்தேன். மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**நிஷா, கண்ணன்**

என் ஒன்றரை வயது மகளுக்கு காய்ச்சல் இருந்தது. யூரின் இன்ஃபெக்சன் இருக்கும் என்று டெஸ்ட் செய்ய சொன்னார்கள். நான் மாதாவிடம் மனமுருகி ஜெபித்து அழுதேன். மாதாவின் அருளால் பிள்ளைக்கு எந்த பிரச்சனையும் வரவில்லை . ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சாந்தோம்**

எனக்கு மூன்று பெண்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்து அவரவர் குழந்தைகளுடன் இருக்கிறார்கள். எனக்கு நிறைய பிரச்சனைகள் இருந்தது. மாதாவிடம் மன்றாடினேன். எல்லாவற்றையும் சரி செய்த மாதாவிற்கே நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

மார்ச் மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**எலிசபெத்**

என் தங்கை மகளுக்கு ஜீவமாதாவிடம் மழலை வரம் வேண்டி ஜெபித்தேன். இரட்டைக் குழந்தைகள் கிடைத்தது. மாதாவிற்கே நன்றிகள் பல. மேலும் குழந்தைகளுக்கு பிரச்சனைகள் இருக்கும் என்று மகளை அட்மிட் செய்தார்கள். பிறகு ஒன்றுமில்லை நல்ல முறையில் இருந்தாள். மேலும் என் மகளும் மருமகனும் கருத்து வேறுபாடு காரணமாக பேசாமலிருந்தார்கள். இந்த ஜூபிலி ஆண்டில் அவர்களுக்காக ஜெபம் செய்தேன். நல்ல மனமாற்றம் கொடுத்த மாதாவிற்கே நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வசந்தா மேரி – வியாசர்பாடி**

என் மகள் BCA முடித்திருந்தார் எவ்வளவோ நேர்காணலுக்கு சென்றும் வேலை கிடைக்கவில்லை. நான் மாதாவிடம் ஜெபித்தேன். நல்லதொரு வேலை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஆரோக்ய டெய்சி - UK**

எனக்கு திருமணம் முடிந்து மழலை வரம் இல்லாமலிருந்தது. நான் UK வில் இருந்து இங்கு வந்து மாதாவிடம் ஜெபித்து வளையல் வாங்கி போட்டேன். அற்புதம் நிகழ்ந்தது. மாதாவின் பரிந்துரையால் நான் கருவுற்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கிளாரா**

நான் சென்னையில் இருக்கிறேன். எனக்கு திருமணம் முடிந்து மழலை வரம் இல்லாமலிருந்தது. மாதாவிடம் விண்ணப்பித்தேன். நான்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு பங்கில் உயிர்ப்பு பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. திருப்பலியில் பங்கெடுத்த பலர் உயிர்த்த ஆண்டவரைக் காண வேண்டும் என்று உருக்கமாக மன்றாடினர். இந்த மன்றாட்டைக் கேட்ட உயிர்த்த ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் காட்சி கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். திருப்பலி முடிந்து அனைவரும் வீட்டிற்கு சென்றதும், உயிர்த்த ஆண்டவர் வீட்டிற்கே சென்று சந்திக்க முடிவு செய்தார். திருப்பலி முடிந்து வீட்டிற்கு சென்று ஒவ்வொரு குடும்பத்தாரும் உயிர்ப்பு பெருவிழா கொண்டாடி கொண்டிருந்தனர். இயேசு முதல் வீட்டிற்கு சென்று கதவைத் தட்டினார். வீட்டின் உரிமையாளர் கதவைத் திறந்து யார் நீங்கள்? என்றார். அதற்கு இயேசு நான்தான் உயிர்த்த ஆண்டவர் என்றார். எத்தனை பேர்டா இப்படி கிளம்பி இருக்கீங்க? என்று சட்டென்று கதவை அடைத்தார் உரிமையாளர். இயேசு மெல்ல நகர்ந்து அடுத்த வீட்டிற்கு சென்று கதவைத் தட்டினார். கதவு திறக்கப்பட்டது யார் நீங்கள் என்றார் உரிமையாளர். இயேசு நான்தான் உயிர்த்த ஆண்டவர் என்று கூறினார். குடிச்சிட்டு இங்க வந்து உளராத, வெளியே போ என்று துரத்தினார் உரிமையாளர். அந்த பங்கில் அனைத்து வீட்டிற்கும் இயேசு சென்றார், ஆனால் அவரை உயிர்த்த ஆண்டவர் என்று யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை. கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் ஒரு குடிசை வீடு இருந்தது, அங்கு ஒரு வயதான தம்பதியர் வசித்து வந்தனர். அந்த வீட்டின் கதவை தட்டினார் இயேசு. வயதான முதியவர் கதவைத் திறந்தார், இயேசுவைப் பார்த்ததும் வாருங்கள் உள்ளே என்று அழைத்துச் சென்றார். இயேசுவுக்கு ஆச்சரியம் நான் யார் தெரியுமா என்று கேட்டார் இயேசு. ஒன்றும் சொல்ல வேண்டாம், முதலில் அமருங்கள் என்றார் முதியவர். இயேசு திரும்பவும் நான்... என்று சொல்ல ஆரம்பித்தார். ஒன்றும் சொல்ல வேண்டாம் தேனீர் அருந்திவிட்டு பேசலாம் என்று தடுத்து விட்டார் முதியவர். இயேசுவுக்கு பெரிய தவிப்பு நான் யார் என்று சொல்லுகிறேன் சற்றுக் கேளுங்கள் என்றார். முதியவர் மீண்டும் தடுத்து விட்டார், சிறிது நேரம் கழிந்த பிறகு இப்போது நீங்கள் யார் என்று கூறும் என்றார். நான்தான் உயிர்த்த ஆண்டவர் என்று இயேசு கூறியதும் அந்த வயதான தம்பதியர் குபீர் என்று சிரித்து விட்டனர். இயேசுவுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஏன் சிரிக்கிறீங்க என்று கேட்டார். அவர்கள் தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருந்தனர். சிரித்து முடித்ததும் முதியவர் சொன்னார் இந்த நள்ளிரவில் ஏழையின் விட்டிற்கு வந்து ஒருவர் தேனீர் அருந்துகிறார் என்றால் அது கடவுளைத் தவிர வேறு யாராலும் முடியாது நீங்கள் உயிர்த்த ஆண்டவர் என்று முன்னரே அறிந்தோம் என்று முதியவர் கூறினார். உயிர்ப்பு பெருவிழாவோடு ஏப்ரல் மாதத்தை தொடங்குகிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதலோடு அன்னை மரியின் மறைப்பணி முழுமையடைகிறது. நற்செய்தியில் உயிர்த்த ஆண்டவர் தாய் மரியாவிற்கு சிறப்பாக தோன்றியதாக எதுவும் எழுதப்படவில்லை. ஆனால் புனித இரண்டாம் ஜான்பால் 1997 மே 21-ம் நாளில் உயிர்த்த இயேசு முதலில் மரியாவிற்குதான் தோன்றி இருக்க வேண்டும். பல விவாதங்களை முன்வைத்தார். அதில் சிறப்பான ஒன்று லூக்கா 24:1-15-ல் நறுமண பொருட்களை எடுத்துக் கொண்டு பெண்கள் கல்லறைக்குச் சென்றனர். ஆனால் மரியாள் அவர்களோடு செல்லவில்லை. ஏனெனில் இயேசு உயிர்த்தெழுந்ததும் முதலில் அன்னை மரியாளோடு தோன்றினார். லூக்கா 1:29-ல் வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணி சிந்தித்துக் கொண்டிருந்தது போல இயேசுவின் உயிர்ப்பும் எத்தகையதோ என்று எண்ணி சிந்தித்து கொண்டிருந்திருப்பர். மனதில் இருத்தி தியானித்து கொண்டிருந்திருப்பர். அன்னை மரியா உயிர்ப்பில் மகிழ்ந்து திடமான நம்பிக்கையை உறுதிபடுத்தினார் போல, நாமும் உயிர்ப்பில் மகிழ்ந்து வாழ அழைக்கப்படவில்லை. அன்னையின் பிள்ளைகளாக உயிர்த்த இயேசுவை வரவேற்று அவருடைய அமைதியிலும் மகிழ்ச்சியிலும் திளைத்திருப்போம். உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

# இறைவனின் மீட்பின் திட்டத்தில் ஒத்துழைத்த மரியா - I

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

தாயும் தந்தையுமான இறைவன் ஒரு அழகான உலகைப் படைத்தார். முனித குலத்தின் முதல் ஆணையும் முதல் பெண்ணையும் படைத்து தனது படைப்பை ஆளவும் அனுபவிக்கவும் பணித்தார். அவர்களின் கீழ்படிதலைப் பரிசோதிக்க, கூடவே ஒரு கட்டளையையும் கொடுத்தார். ஆனால் தேர்வில் தோற்றுப் போன ஆதிப்பெற்றோர், ஏதேன் என்ற தோட்டத்தில் மகிழ்வாகவும், இறைவனோடு மாலையில் இதமான காற்றில் உலாவரும் அந்த இனிமையான சூழலிலிருந்து துரத்தப்பட்டனர். எவையே இப்பெரும் தவறுக்குக் காரணம் என ஆதாம் குற்றம் சாட்டினார். பாவமும் தீமையும், சாபமும் சாவும் இவ்வுலகில் நுழைவதை உணர்ந்த இறைவன், அன்றே அதை மீட்கத் திருவுளம் கொண்டார். தனது மகனை இவ்வுலகிற்கு அனுப்ப விரும்பினார். வார்த்தை மனுருவானார் நம்மிடையே குடி கொண்டார். இந்த மனித அவதார நிகழ்வில் மரியாவை ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்தி, தனது மீட்பின் வரலாற்றைத் தொடங்கினார். இந்த மீட்பின் திட்டத்தில் நமது அன்னை மரியா முற்றிலும் இறைவனுக்குப் பணிந்து தனது கீழ்படிதலால் புதிய ஏவையாகப் பயணித்தார். இன்றும் அப்பணிகளைத் தொடர்கின்றார். கன்னியாகவும் அன்னையாகவும் மிளிர்ந்து மனுக்குல மீட்பில் தனது முழு ஒத்துழைப்பை வழங்கிய மரியாவின் பங்கினை இக்கட்டுரையில் ஆழமாக சிந்திப்போம்.

## மீட்பின் பயன்கள்

மனித வரலாற்றில் மிக முக்கியமான, அழகான ஒரு நாள் நமதாண்டவராம் இயேசு கிறிஸ்து உயிர்த்தநாள். நானே உயிரும் உயிர்ப்பும் ஒளியும் என்று முழங்கியவராய் இவ்வுலகிற்கு மகிழ்வையும், அமைதியையும் கொண்டு வந்த நாள் இந்நாள். சாவு அவரைத் தன் பிடியில் வைத்திருக்க இயலவில்லை. தான் உயிர்த்தெழுமுன் இயேசு பாடுகள், வேதனைகள், அவமானங்கள், மரணம் ஆகியவற்றை உடலிலும் உள்ளத்திலும் தாங்கினார். இறைவாக்கினர் எசாயா முன்னுரைத்த துன்புறும் ஊழியரின் அத்தனை இகழ்ச்சிகளையும் தாங்கிக் கொண்டு கொலைக் களத்திற்கு இட்டுச் செல்லப்படும் கத்தாத செம்மறி போன்று அமைதியாக கல்வாரி மலைக்குச் சென்றார். ஆனால் தந்தை இறைவன் அவரை கல்லறையினின்று மூன்றாம் நாள் உயிர்ப்பித்து, அனைத்து மாட்சி,வல்லமையை அவருக்கு வழங்கினார். இவ்வாறு இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு வழியாக நாம் மீட்பைப் பெற்றோம். அந்த மீட்பின் பயன்களை ஒவ்வொரு நாளும் அனுபவிக்க நம்மை அழைக்கின்றார்.





# ஆண்டவரின் உயிர்ப்பு நம்மில்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

தவக்காலம்.......
நாம் நம்மை உணரும் காலம்
உள்ளத்தின் உள்ளிருள் நீக்கி
ஒளிரச் செய்யும் காலம்
இறைவார்த்தைகள், மறையுரைகள்
தியானம், தவமுயற்சிகள்
இவற்றால்
ஆண்டவரோடு ஒப்புரவாகி,
ஐக்கியமாகி
நாமும் உயிர்க்கும் காலம்
உலகையே மாற்றிய மாபெரும்
சக்தி
நமதாண்டவரின் உயிர்ப்பு
இறைவன் இஸ்ரயேல் மக்களை
அடிமைத் தளையினின்று மீட்டார்
அன்று
ஆண்டவர் இயேசு
பாவத்தளையினின்று
மனுக்குலத்தை மீட்டார் இன்று
சாவுக்கே சவால் கொடுத்து
வெற்றிவீரனாய்
வாகைசூடிவிண்ணகம் ஏறினார்
நமது மீட்பர்
இயேசுவின் உயிர்ப்பு
உருமாறச் செய்தது சீடர்களை
வழிப்போக்கனாகச் சீடருடன் சென்ற
இயேசு
அப்பத்தைப் பிட்கையிலே
கண்டார் அவர்கள், உயிர்த்த
இயேசுவை
பூட்டிய அறையினிலே சீடர் நடுவில்
தோன்றிய இயேசு
தம் காயத்தில் கைவிட்டுப் பார்க்கச்
சொல்லி
அழைக்கிறார் சந்தேகித்த
தோமாவை.
தம் அன்புச் சீடருக்கு மீன்
சமைத்துத் தருகிறார் கடற்கரையில்
உயிர்த்தபின் இவ்வாறு மும்முறை
சீடருக்குத் தோன்றிய இயேசு....
அச்சம் நீங்கி நற்செய்தி
சொல்லவும்
திருமுழுக்குக் கொடுக்கவும்
நோய்களை நீக்கிக்
குணமளிக்கவும்
வல்லமை தந்து அவர்களை
அனுப்புகிறார்.
சீடர்கள் பெற்ற
உயிர்த்த இயேசுவின் அனுபவம்
உலகெங்கும் கிறிஸ்தவம்
உயர்ந்தோங்க
அடித்தளமாய் அமைந்தது.
யூதருக்கு அஞ்சி ஒடுங்கியிருந்த
சீடர்
நாடு கடந்து துன்பங்கள் பல
தாங்கிதம் இன்னுயிரையும்
இயேசுவுக்காய்இழக்கத்
துணிந்தனர்கோடானகோடி மக்கள்
வாழ்வில் நம்பிக்கை
ஊட்டிகிறிஸ்தவம்
வளர்ந்துள்ளதென்றால்அதன்
ஆதிமூலம் ஆண்டவரின்
உயிர்ப்புத்தான்.
ஆண்டவரின் உயிர்ப்பே
புனித பவுல் அடிகளாரை
உருமாற்றம் செய்தது
கிறிஸ்தவத்தை அழிக்க
முனைந்தவர்
கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறார்
கிறிஸ்து உயிருடன்
எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள்
பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள்
கொண்டுள்ள
விசுவாசமும்பொருளற்றதாய்
இருக்கும் (1 கொரி 15:14)இதோ
உலகம் முடியும்வரை
எந்நாளும்உங்களுடன் இருக்கிறேன்
(மத் 28:20)
இரண்டாயிரம் ஆண்டுகளாக
திருச்சபை தழைத்தோங்கிச்
செழித்துள்ளதென்றால்
அதற்கு வித்தாக இருப்பது
கிறிஸ்துவை அறிவித்துக்
கொண்டிருக்கும்
ஒவ்வொருவரும் பெற்றுள்ள
உயிர்த்த இயேசுவின் அனுபவமே
இயேசுவின் சீடர்கள், பவுலடியார்,
புனிதர்கள்
இவர்கள் பெற்ற உயிர்ப்பின்
அனுபவம்
நாமும் பெறவேண்டும்
அன்னை தெரசா போன்று
கிறிஸ்துவுக்காய்,
கிறிஸ்துவுக்குள்பணி செய்வதன்
மூலம்ஆண்டவரது உயிர்ப்பின்
அனுபவம்நமதாக வேண்டும்

2006 ஆம் ஆண்டு முப்பையூரிலும் 2008 ஆம் ஆண்டு திருச்சியிலும் 2007 ஆம் ஆண்டு பெருமாளேரியிலும், 2022 ஆம் ஆண்டு கீழ்நாத்தூரிலும் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு கிராமபுற நடுத்தர ஏழை மாணவர்களுக்கு தரமான கல்வி அளிப்பதில் திருச்சி நகரில் நகர்புற மாணவர்களுக்கு சிறந்தவிதமாக கல்விப் பணி செய்து வருகின்றோம்.

**சமூகப் பணி**

ஐம்பது ஆண்டு பயணத்தில் எம் சபை பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து, ஏழை மக்களின் பொருளாதாரத்தில் உயர்வுப் பெற உதவியாக இருந்துள்ளது. இந்தாண்டுகளில் ஏழை மாணவர்களின் கல்விக்காக பொருளாதார உதவிகள் செய்ததுடன் விடுபட்ட மாணவர்களுக்கு பள்ளிகள், தையல் பயிற்சி நிலையங்கள், கணிணிப் பயிற்சி வகுப்புகள் என்று பல்வேறு இடங்களில் உதவிச் செய்து வருகின்றோம். இத்துடன் ஜெகன் மாதா இல்ல வளாகத்தில் முதியவர்களுக்கான இல்லம் ஒன்று நிறுவி மரியின் ஊழியர் பொதுநிலையினரின் கண்காணிப்பில் நடத்தி வருகின்றோம்.

**மியான்மரில் எம் சபையின் பயிற்சியும் பணிகளும்:**

மியான்மர் நாட்டில் மரியின் ஊழியர் சபை அருட் சகோதரிகள் நூறு ஆண்டுகளாக பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றார். அவர்களின் துணையோடு அருட்தந்தை சிங்கராயர்(யங்கூன் மறைமாவட்டம்) அவர்களின் வழிநடத்துதலாதல் எம் மரியின் ஊழியர் சபை அங்கு கால் ஊன்றியது. மரியின் ஊழியர்களாக துறவறப் பயிற்சி பெற இருந்த ஒரு சில மாணவர்கள் இந்தியாவிற்கு வந்து தங்களின் துறவறப் பயிற்சிகளைப் பெற்று குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டு யங்கூன் மறைமாவட்டத்தில் அருட்தந்தை சிங்கராயருடன் இணைந்து பங்குப் பணிச் செய்து வந்தார்கள். இவர்கள் 2012 ஆம் ஆண்டு யங்கூன் அருகில் சிரியம் என்ற இடத்தில் சபையில் சேரும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் இல்லம் கட்டி எழுப்பப்பட்டது. இப்போது தொடக்கப்பயிற்சிகளை அங்குப் பெற்றவர்கள், மெய்யியல் படிக்க இந்தியாவிற்கும் இறையியல் படிக்க ரோமைக்கு சென்று படித்து வருகின்றனர். அப்பயிற்சி இல்லத்தோடு தோங்குவா என்ற இடத்தில் ஓர் பங்கும் மேமியா என்ற இடத்தில் மெய்யியல் படிக்க இல்லமும் உருவாக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் ஒரு சில இடங்களில் சிறார் பள்ளிகளும், விடுமுறை காலங்களில் பல்வேறு இடங்களில் சிறப்பு பயிற்சிகளும் அளித்து ஏழை, எளிய மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் மன உறுதியோடு அப்பணிகளைச் செய்து மரியின் ஊழியர்களின் பயிற்சியிலும் மக்களின் வளர்ச்சியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள்.

இறுதியாக ஐம்பது ஆண்டு பொன்விழா கொண்டாட்டத்தின் போது எம் ஐக்கிய அன்னை மறைமாநிலம் மகிழ்வதோடு இறைவனுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்திய மண்ணில் விதைத்திட்ட மரியின் ஊழியர் சபை தந்தையர்களும், சபை தலைவர்களும், சிறப்பாக வெனிசியன் மறைமாநில அதிபர் தந்தையர்கள் அனைவருக்கும் நன்றி நவில்கின்றேன். எல்லா சூழலிலும் எம்முடன் இருந்து பணியாற்றிய தலைவர்கள், ஆலோசக தந்தையர்கள் உடன் உழைப்பாளிகள் அனைவருக்கும் நன்றிகள். எம் சபை வளர்ச்சிக்கு உறுதுணைாக இருந்த மரியின் ஊழியர் சபை அருட்சகோதரிகள், அவர்கள் தலைமைச் சகோதரிகள் அவர்களின் உதவிகள் அனைத்திற்கும் ஐக்கிய அன்னை மறைமாநிலத்தின் சார்பாக நன்றி கூறுகின்றோம். எம் சபை தொடர்ந்து வளர்ந்திட, வழிநடத்திட இறைவனிடம் வேண்டிச் செபிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றேன். நன்றிகள் பல...





ஒவ்வொரு நாளும் கொண்டாடும் நற்கருணை பலியின் வழியாக நாம் பாஸ்கா மறைபொருளில் பங்கேற்கும் பெரும் பாக்கியத்தைத் தருகிறார். இறைவனின் அன்பையும் அருளையும், மன்னிப்பையும், கருணையையும் அபரிவிதமாக அருட்சாதனங்கள் வழி பெற்று நிலை வாழ்வை நோக்கித் திருஅவையில், திருஅவையோடு பயணித்து வருகிறோம். மீட்பின் பயன்களைப் பெற்று ஒவ்வொரு நாளும் நாம் பாஸ்கா வாழ்வை அல்லது விடுதலை வாழ்வை வாழ்வது நமது கடமை. இவ்வாறு பாஸ்கா அமைதியில், மகிழ்வில் நிலைத் திருப்பது நாம் மீட்பை அனுபவிக்கிறோம் என்பதன் அடையாளங்களாகும். நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் விடுதலை உணர்வுகளால் நிரப்புவதும் நமது கடமை. இதை மிக அருமையாக தன் வாழ்வில் நிறைவேற்றியவர் அன்னை மரியா. இறைவனின் மாபெரும் மீட்பு திட்டத்தில் மரியாவின் பங்கு பெரியது. அது இறைவன் அவருக்குக் கொடுத்த அருளும் அழைப்பும் கொடையும் ஆகும்.

**மரியாவின் அழைப்பு**

பழைய ஏற்பாட்டில் ஒரு சில பகுதிகளில் மரியாவின் பிறப்பு, அழைப்பு, மீட்பின் வரலாற்றில் அவரின் ஈடுபாடு அனைத்தும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் தரப்படுகிறது. தொடக்கநூலிலே உனக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" (3:15)என்ற ஆண்டவராம் கடவுளின் குரலிலே, மரியா புதிய ஏவையாக அடையாளம் காட்டப்படுகிறார். இறைவாக்கினர் எசாயா கூறுகிறார்: ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை அருளுவார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்" (7:14). உலகம் தோன்று முன்பே மரியா இறைவனின் நினைவில் கருவானார் உருவானார் அருளால் அவரை உடுத்தினார். ஆவரை பாவக் கறை அனைத்திலுமிருந்தும் விடுவித்தார். நம்மோடு என்றும் உறையும் மீட்பராம் இம்மானுவேல் அவரது திருவயிற்றில் உற்பவிக்கத் திருவுளம் கொண்டார். என்னே அவரது ஒப்பற்ற பேரழைப்பு! இஸ்ரயேல் மக்களை ஆட்சி செய்யவிருக்கும் மீட்பர் பெத்லகேமிலிருந்துதான் பிறப்பார் என்பதை இறைவாக்கினர் மீக்கா மிக ஆணித்தரமாகக் கூறுகிறார். 'நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பத்தினுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார் அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக்காலமாய் உள்ளதாகும் (5:2). மத்தேயு, லூக்கா நற்செய்தியாளர்கள் மரியா, மீட்பரின் தாயாக அழைப்பு பெறுவதை வலியுறுத்துகின்றனர். லூக்கா விவரிக்கும் இயேசு எனும் மீட்பர் மரியாவிடம் பிறக்கும் நிகழ்வை மிகவும் தத்ரூபமாக விவரிப்பது ஒருகாட்சித் தியானம் போன்று நமது நினைவில் நீங்காது நிலைத்து நிற்கின்றது. புனித பவுல் அடிகளாரின் கூற்றும் மரியாவின் அழைப்பை ஆழமாக படம் பிடித்துக் காட்டுகிறது. "காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம்பிள்ளைகள்

ஆக்குமாறு கடவுள் தம்மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்”(கலா. 4: 4-5)

ஒருபெண்ணால் சாவு வந்தது போல்,மற்றொரு பெண்ணால் வாழ்வும் வரவேண்டும் என்பதற்காக, கிறிஸ்து மனிதர் ஆவதற்கு முன்பே அவரது தாயை அமல உற்பவியாக பிறக்கச் செய்தார். கருவான முதல் நொடியிலிருந்தே தனிச்சிறப்பான தூய்மையின் மாட்சியில் அணி செய்யப்பட்டிருந்த நாசரேத்துக் கன்னியை வானதூதர் ‘அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என வாழ்த்தப் பணிக்கிறார். இறைவன் தூய ஆவியாரின் வல்லமையால் கன்னி மரியா கருவுற்று தூய குழந்தையாம் இறைமகன் இயேசுவைப் பெற்றெடுப்பார் என எடுத்துக் கூறுகிறார். மரியாவும் ‘நான் ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்”என்று கூறியதால் ஆதாமின் மகளான மரியா இயேசுவின் தாயானார் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. இறைவன் மனிதனாகும் மனித அவதார நிகழ்வுச் செய்தி முதன் முதலில் தாழ்ச்சியும், இறைவன் மீது மட்டும் நம்பிக்கை கொண்ட ஒரு எளிய பெண்ணுக்குத் தரப்படுகிறது. யூத சமுதாயத்தில் பெண்கள் இரண்டாம் தரமக்களாகக் கருதப்பட்டனர். அடிமைகளாக நடத்தப்பட்டனர். ஆனால் இறைவன் தனது மகனின் தாயாகும் பேற்றினை அருளால் நிறையப் பெற்ற மரியாவுக்கு வழங்கி, பெண்குலம் தலை நிமிர்ந்து நிற்கச் செய்கிறார். மனுக்குல மீட்புக்காக மரியாவுக்கு இறைவனின் தாயாகும் அழைப்பு கிடைக்கின்றது. தூய இரேனேயு கூறுவது போல, ‘மரியா தனது கீழ்ப்படிதலால் தானும், மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெறக் காரணமானார்”. திருத்தந்தையர்கள் பலர் ஏவையோடு ஒப்பிட்டு மரியாவை ‘வாழ்வோரின் தாய்” எனவும் ‘ஏவையால் சாவு,மரியாவால் வாழ்வு”எனத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றனர்.

**மரியாவின் சீடத்துவவாழ்வு**

இறைவனின் தாயாகவும் பேறு எனக்கு கிடைத்து விட்டது என்று நம் அன்னை மரியா பெருமையிலும் மேன்மையிலும் நிலைத்து விடவில்லை. மேசியா ஆற்றவிருக்கும் விடுதலைச் செயல்பாடுகளை மீட்பின் கீதமாக முழங்க இடத்தையும் நேரத்தையும் தேடினார். இயேசுவைத் தாங்கிய முதல் நற்கருணைப் பேழை யூதேய நாட்டிற்குப் பயணித்தது. விரைந்து சென்றார். மீட்பின் மகிழ்வுச் செய்தியை தம் உறவினரிடம் பகிர்ந்து இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவானின் பிறப்பில் அகமகிழ்ந்தார். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. நமது கடமை அவருக்கு பணிவதே என்று மரியா தனது வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் உணர்ந்தார், செயல்பட்டார், அதையே நமக்கு உணர்த்தி வருகின்றார். இயேசுவின் பிறப்பில் எளிமையின் உச்சநிலைக்குச் சென்றார். அவரது குழந்தைப் பருவத்தில் மரியா அனுபவித்த இன்னல்கள் ஏராளம். ஆயினும் பொறுப்புடனும் வளனாரின் பாதுகாப்பிலும் தனது அன்பு மகனை இறைவனுக்கும் மனிதனுக்கும் பிரியமானவராக வளர்த்து எடுத்தார். இயேசுவின் பொதுவாழ்வில் சீடர்களின் குழுமத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இயேசுவின் தெய்வீக ஆற்றலை வெளிக்கொணரும் நேரத்தை உணர்த்தினார்.

தொடரும்.........





சகோதரர்கள் புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் படித்தனர். அதே வேளையில் நவதுறவிகள் தங்கள் பயிற்சிகளை இவ்வில்லத்தில் பெற்றார்கள், கல்லூரி படிப்பவர்களும், புகுமுக சகோதரர்களும் இவ்வில்லத்தில் தங்கி பயிற்சிப் பெற்றார்கள்.

எம் சபையை இன்னும் வரிவாக்கம் செய்து, துறவறப் பயிற்சி இல்லம் புதிதாக உருவாக்க வெண்டி 1987-ஆம் ஆண்டு ஜுன் மாதம், சென்னையில் பெருங்குடி என்ற இடத்தில் ஒர் வீடு வாங்கி, அங்கே தங்கி, அங்கிருந்து திருவான்மியூரிலுள்ள இயேசு சபையினரால் நடத்தப்படும் சத்திய நிலையம் என்ற கல்லூரியில் மெய்யியல் படிப்பதற்காக மூன்று சகோதரர்கள் சென்று வந்தனர். மறு ஆண்டு அங்கு நவதுறவிகளுக்கும் பயிற்சி இல்லமாக இருந்தது. மூன்று ஆண்டுகளில் நிரந்தரமாக இல்லம் அமைக்க ஒக்கியம் பேட்டையில் இடம் வாங்கி அழகிய ஒர் இல்லம் அமைத்து 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் நாள் புதிய இல்லம் அர்ச்சிக்கப்பட்டது, இவ்வில்லம் மெய்யியல் படிக்கும் சகோதரர்களுக்கும் நவதுற பயிற்சி இல்லமாக அமைந்தது. இந்த காலக்கட்டத்தில் கோவளம் பங்கின் கிளைப் பங்காக இந்த சோழிங்கநல்லூரில் இருந்த சிற்றாலயத்திற்குச் சென்று திருப்பலி நிறைவேற்றி, குழந்தைகளுக்கு மறைக்கல்வி கற்றுத்தந்து அப்பகுதியில் இருந்த கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களை ஆன்மீகத்தில் வளர்த்த பின் 1998 ஆம் ஆண்டில் அது ஒர் தனிப்பங்காக உருவெடுத்து 2000 ஆம் ஆண்டில் புதிய ஆலயம் கட்டப்பட்டு மரியின் ஊழியர்களால் இன்றுவரை வழநடத்தப்பட்டு வருகின்றது. இந்த காலக்கட்டத்தில் அம்மக்களின் ஆன்மீக வளர்ச்சியோடு, சமூக, பொருளாதார வாழ்வையும் உயர்த்தவதற்கான பல உதவிகளைச் செய்து மாணவர்களின் கல்விக்காக பொருள் உதவியும் செய்து மக்களின் வாழ்வில் ஒளியேற்றப்படுகின்றது.

மேலும் 1995 ஆம் ஆண்டில் சிவகங்கை மறைமாவட்டத்தில் முப்பையூர் பங்கு ஆரம்பித்து பங்குப் பணியும், பெங்களூரில் இறையியல் படிப்பதற்காக சகோதரர்களுக்கு ஜெய மாதா இல்லம் ஒன்றை ஆரம்பித்தனர் தொடர்ந்து தஞ்சையில் ஜீவ மாதா இல்லம் என்று புகுமுக மாணவர்களுக்கான இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து மாமல்லபுரம் அருகில் பெருமாளேரியில் நவதுறவற இல்லம் அன்னையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி பல்வேறு இடங்களில் துறவற பயிற்சி இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தனித் தனியாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

**பங்குப் பணி**

தொடக்க காலத்தில் துறவறப் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த நிலையில் திரு அவையின் இறையாட்சிப் பணியில் வெளிப்படையாக பங்கு பெற்றிட பல்வேறு இடங்களில் பங்குப் பணியும் ஆற்றி வருகின்றோம். திருச்சியில் ஜெகன் மாதா பங்கு, முப்பையூரில் அருள் மாதா பங்கு, சோழிங்கநல்லூரில் குழந்தை இயேசு பங்கு, சிலுவைபுரத்தில் லூர்து மாதா பங்கு, கீழ்நாத்தூரில் அற்புத மாதா பங்கு மற்றும் சென்னை ஆவடியில் பூம்பொழில் நகரில் அமலோற்பவ மாதா பங்கு என்ற இடங்களில் பணிச் செய்து வருகின்றோம். அதோடு இத்தாலி நாட்டில் பதுவை நகரிலும், அமெரிக்கா நாட்டில் லாஸ் ஏஞ்சல்ஸில் ஒரு பங்கிலும், மியான்மர் நாட்டில் தோங்குவா என்ற இடத்தில் ஒர் பங்கிலும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

**கல்விப் பணி**

இன்றைய சூழலில் கல்விதான் மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை மாற்றி உயர்த்துகின்றது என்பதை உணர்ந்து எம் சபையும் ஒரு சில இடங்களில் ஆங்கில வழிப் பள்ளிகளை நடத்தி வருகின்றது.



## இந்தியாவில் எம் மரியின் ஊழியர் சபை பொன்விழா ஆண்டு (1974-2024)

பேரருட்பணி. உவரி அந்தோணி மறைமாநில அதிபர்

மரியின் ஊழியர் சபை, இத்தாலி நாட்டில்லுள்ள பிளாரன்ஸ் நகரில் 1233-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள், அன்னை மரியாவால் தூண்டப்பட்டு, எழுவரால் தோற்றுவிக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக பல்வேறு உலக நாடுகளில் பரவி, பணி செய்து வந்த எம் சபை அருட்தந்தையர்கள், சகோதரர்கள் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் நாள் இந்திய மண்ணில் கற்சிற்பங்களுக்கு தலை சிறந்து விளங்கும், மாமல்லபுரத்தில், அன்றைய சென்னை-மைலாப்பூர் மறைமாவட்டத்தில் தொடங்கப்பட்டது. பன்முகத் தன்மை கொண்ட நம் இந்திய மண்ணில், அவற்றின் பண்பாடுகளை உள்வாங்கிக்கொண்டு, காலம், இடத்திற்கேற்ப பல்வேறு மறைமாவட்டங்களில் பணி செய்து வருகின்றது. பொன்விழா ஆண்டைக் கொண்டாடி, சிறப்பிக்கும் இவ்வேளையில் கடவுளுக்கும், அன்னை மரியாவின் தாய்மை பிரசன்னத்திற்கும், எம் சபையைத் தோற்றுவித்த ஏழு புனிதர்களுக்கும் நன்றிக் கூறி மகிழ்கின்றோம்.

மாமல்லபுரத்தில் எம் சபையை ஆரம்பித்து, அதற்கு உயிர் கொடுத்து வளரச் செய்த அருட்தந்தை சாந்து ஸ்தனிஸ்லாஸ் மஊச, அவருடன் இணைந்து பணி செய்த எம் தாய் மறைமாநிலமான வெனிசியன் மறைமாநிலத்திலிருந்து வந்த இத்தாலி அருட்தந்தையர்கள் மரியானோ மார்டினெல்லோ மஊச, ஜோசப் பெர்னார்டி மஊச, ஜோசப் செளப்பா மஊச மற்றும் ரென்ஸோ மார்கோன் மஊச அவர்களின் அர்ப்பணம், விடா முயற்சியினால் சபையானது பல்வேறு இடங்களுக்கு பரவியது. அவர்களோடு எம் சபைத் தலைவர்கள், மறைமாநில அதிபர்கள் எம் சபையின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தார்கள். இவர்களோடு எம் சபையிலிருந்து வந்த பல்வேறு அருட்தந்தையர்களும், சில இயேசு சபைக் குருக்களும் தொடக்ககால வளர்ச்சியில் அதிகம் பங்களித்தார்கள்.

மாமல்லபுரத்தில் தொடங்கிய எம் சபை, 1975-ஆம் ஆண்டிலே ஓர் இல்லம் அமைத்து சபையில் சேரும் மாணவர்களுக்கு துறவறபப் பயிற்சிகள் அளித்து, சபை எதிர்காலத்தில் வளர வித்திட்டார்கள். துறவறப் பயிற்சிகளை சிறப்புடன் செயல்படுத்த, மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்த, அன்றைய நாளில் ஒரு சில துறவற மாணவர்களை சென்னை லயோலா கல்லூரியில் கல்லூரி படிப்பிற்காக அனுப்பி வைத்தார்கள். இப்பயிற்சிகளை இன்னும் சிறப்புடன் செய்திட திருச்சி நகரைத் தேர்ந்தெடுத்து அங்கிருந்து கல்லூரிக்குச் செல்வதற்காக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். முதலில் கிராப்பட்டில் ஒரு வாடகை வீட்டிலிருந்துக் கொண்டு திருச்சி புனித வளனார் கல்லூரியில் பட்டப்படிப்பை ஆரம்பித்தனர்

1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் நாள், ஜெகன் மாதா இல்லம் கட்டித் திறக்கப்பட்டு அங்கே பல்வேறு நிலை சகோதரர் துறவறப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இந்தக் காலத்தில், ஒரு சில





# அன்னையின் (4) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அருளின் அன்னை பேராலயம், மிலான்

## (Santa Maria delle Grazie, Milano)

அருளின் காலமாம் தவக்காலத்தை பல்வேறு தவ, ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு ஆண்டவரின் பாடுகளோடு இணைந்து நடந்து, இறுதியில் ஆண்டவரின் உயிர்ப்பில் அகமகிழும் காலம் இது. தவக்காலத்தின் இறுதியில் ஆண்டவரின் பாஸ்காவை நினைவுகூர்ந்து, அன்பின் கட்டளையை நமக்களித்து, எல்லாவற்றிக்கும் மேலாக தன் நிறைவான பிரசன்னம் நம் மத்தியில் நிலைத்திருக்க அவர் நமக்களித்த ஒப்பற்ற அருள்சாதனம் நற்கருணையாகும். இந்தக் கட்டுரையில் நாம் காண இருக்கும் இப்பேராலயத்திற்கும் ஆண்டவரின் இறுதி இராவுணாவிற்கும் ஒரு நெருங்கிய தொடர்புள்ளது. எனவேதான், இம்மாதம் இந்த பேராலயத்தை பற்றி எழுதவிழைகிறேன்.

மிலான் நகரம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரமாகும். இத்தலத்திருஅவையின் ஒப்பற்ற புனிதராம் புனித அம்புரோசியாரின் போதனைகளை உள்வாங்கிய இத்தலத்திருஅவை தனக்கென்ற ஒரு வழிபாட்டு முறையையும், திருவழிப்பாட்டு காலஅட்டவணையும் கொண்டுள்ளது. அது அம்புரோசியார் வழிபாட்டு முறை என்றழைக்கப்படுகிறது. மிலான் நகரின் புனித அம்புரோசியாரின் வாழ்வோடு தொடர்புடைய பல அடையாளங்கள் இன்றும் உள்ளன. இன்று மிலான் நகரம் உலகின் தொழில் நகரங்களின் ஒன்றாகவும், புதுவித ஆடைகளை அறிமுகப்படுத்தும் தொழிலின் தலைநகரமாகவும் உள்ளது. இந்நகரை பற்றி இன்னும் பலவற்றை விரிவாக எழுதலாம் என்றாலும், நம் கட்டுரைக்கு உகந்தவற்றை மட்டும் இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

மிலான் நகரில் மறுமலர்ச்சி காலத்தின் புனித தோமினிக் சபை துறவிகள் தங்களின் இரண்டாவது பணித்தளத்தையும், துறவற இல்லத்தை கி.பி. 1459ல் புனித விக்டர் பங்கை மையப்படுத்தி ஏற்படுத்தினர். மிலான் நகரில் அவர்களின் முதல் துறவற இல்லமானது சபை தோற்றுவிக்கப்பட்ட 11 ஆண்டுகளில் கி.பி. 1227ஆம் ஆண்டு புனித யுஸ்தோஸிரிசோவில் நிறுவப்பட்டிருந்தது.



இன்றுள்ள புனித விக்டர் பங்குதளப்பகுதியில் தங்கள் துறவற இல்லத்தை நிறுவியிருந்த தோமினிக்கன் துறவியருக்கு, கி.பி. 1460 ஆம் அப்பகுதியில் புகழ்வாய்ந்த கஸ்பார் விமர்காதி என்கிற பிரபு ஒரு பெரிய நிலத்தை துறவற இல்லத்திற்காக கொடையாக வழங்கினார். அந்நிலத்தில் அருளின் அன்னை என்ற சிற்றாலயமும், விமர்காதி குடும்பத்தின் படைப்பிரிவினர் தங்குவதற்கான ஒரு இல்லமும் அமைந்திருந்தது. விமர்காதி குடும்பத்தினரே தொமினிக்கன் துறவியருக்கு பரந்து விரிந்த ஒரு இல்லத்தை அமைக்க விரும்பினர். அவ்வில்லமானது அருளின் அன்னை சிற்றாலயத்தை உள்ளடக்கியதாகவும், அத்துறவற மடத்தின் உள்தாள்வாரங்களில் தங்கள் குடும்பத்தினரின் கல்லறைகள் அமையவேண்டும் என்கிற விருப்பத்தை வெளிப்படுத்தினர். அதன் விழைவாக, கி.பி. 1463ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் நாள் இப்புதிய துறவற இல்லம் மற்றும் ஆலய விரிவாக்கத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கலைநயத்தோடும், மறுமலர்ச்சி காலத்தின் வெளிப்பாடுகளையும் கொண்ட இம்மகத்தான பணியானது மிலான் நகரின் அக்காலக்கட்டத்தில் புகழ்பெற்று விளங்கிய குயின்போர்த்தே சொலாரி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரின் ஒப்பற்ற கலைத்திறனுக்கு மிலான் மறைமாவட்ட பேராலயம், மிலான் மருத்துவமனை போன்றவை இன்றும் கட்டியம் கூறுகின்றன. இவரின் திறமைமிக்க பணியால் துறவற இல்லத்தின் கட்டுமான பணிகளானது 1469ஆம் ஆண்டு நிறைவுற்றன. இத்துறவற இல்லமானது மூன்று உள்தாழ்வாரங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. பேரிய தாழ்வாரத்தை சுற்றி துறவிகளின் அறைகளும், ஆலயத்தை ஒட்டி அமைந்துள் தாழ்வாரத்தின் பிரபு குடும்பத்தினரின் கல்லறைகளும் அமைந்துள்ளன.

அருளின் அன்னையின் ஆலய கட்டுமான பணிகளும், துறவற இல்லத்தின் கட்டுமான பணிகளுடன் தொடங்கியது. அக்காலக்கட்ட நடைமுறைகளின் படி, முதலில் பலிப்பீட பகுதியின் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டன.

இப்பேராலயத்தின் முகப்பு மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மையப்பகுதி அகலமாகவும், இருபுறமுள்ள பகுதிகள் குறுகியதாகவும் உள்ளது. இது ஆலயத்தின் உள்புறத்தை வெளிப்படுத்தவதாக உள்ளது. ஆலயத்தின் சுவர்கள் சுடப்பட்ட செங்கற்களாலும், ஆலயத்தின் தூண்கள் பளிங்கு கற்களாலும் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆலயத்தின் மையப்பகுதியானது ஒரு மிகப்பெரிய மையமண்டபமாக விளங்குகிறது. இங்கு அமைக்கப்பட்டுள்ள தூண்கள் இரு பக்கவாட்டு பகுதிகளை சரிவிகிதத்தில் பிரிக்கிறது. மேலும், இம்மாதிரியான கட்டிட அமைப்பு கோத்திக் கட்டிட கலையின் தனித்துவமாகவும் விளங்குகிறது.








**தூய சிப்ரியன்:** உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக என செபிக்கின்றோம். அவரது திருவுளம் நிறைவேறுதல் என்பது சாதாரண காரியமல்ல. ஏனெனில் தீயவன் நம் எண்ண அளவில் செயலளவில் கடவுளுக்கு கீழ்படிந்த அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதை தடை செய்கின்றான். எதிர்க்கின்றான். ஆனாலும் கடவுளின் விருப்பம் நம்மில் செயல்பட நாம் செபிக்கிறோம். கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற கடவுளின் உதவி, பாதுகாப்பு நமக்கு தேவைப்படுகிறது. யாரும் அவரவர் தன்மையில் சக்தி படைத்தவரல்லர். ஆனாலும் கடவுளின் இரக்கத்தால் கனிந்த உள்ளத்தால் நம்மீது வலிமை சேர்க்கும் வகையில் அருள் பொழியப்படுகிறது. அப்பேற்பட்ட அருளை தன் சேயான இயேசுவின் வழியாக பெற்றுதர வல்லமை படைத்ததால் அவரை தேவ வரப்பிரசாதத்தின் தாய் என்று புகழ்வது சாலச் சிறந்தது.

**தூய சிரில்:** பேனா எழுத்துக்களை உருவாக்க வேண்டுமென்றால் அங்கு ஒரு எழுத்தாளர் தேவைப்படுவதுபோல் கடவுளின் அருளைப் பெற நம்பிக்கைக் கொண்ட இதயங்கள் தேவைப்படுகிறது. கடவுள் அருளை வரமாகப் பொழிகின்றார். இது ஒரு கொடை. ஆனால் பெற்றுக் கொண்ட நிலையில் நாம் ஒவ்வொருவரும் அதைப் பேணிக்காப்பது நம்முடைய பொறுப்பு. ஒட்டு மொத்தமாக அனைத்து திருச்சபை தந்தையர்களும் தரும் செய்தி: அருள் வரங்களின் முக்கியத்துவமும் அதன் தேவையும் தான் தேவையிருந்தால் மட்டும் போதாது. நிறைவு செய்யப்பட வேண்டும். இதனை யார் நிறைவு செய்வார்? என்ற கேள்விக்கு விடையாய் இருப்பவர் மரியா. பொதுவாக அருள் வரங்களை பாதுகாத்தல் தீமையை எதிர்த்து செயல்படல் குணப்படுத்துதல், உதவி வேண்டல் என பல வடிவங்களில் நாம் பெறுகின்றோம். இத்தகைய அருள் வரங்களை தருபவர் இயேசு கிறிஸ்து. ஏனெனில் அவர் வழியாகவே அனைத்தும் படைக்கப்பட்டன. இவ்வாறு எல்லா வரங்களையும் தரும் வல்லமை கொண்டவர் மரியா பெற்றெடுத்து நமக்கெல்லாம் வரங்களை பெற்றுத் தரும் ஊடகமாக இருக்கும் காரணத்தினாலேயே மரியா தேவ வரப்பிரசாதத்தின் தாய் என அழைக்கப்படுகின்றார்.

மரியா அருளைப் பெற்றுக் கொண்ட பெண்மணி மட்டுமல்ல. அதைக்காத்து பின்னர் நமக்கு வாரி வழங்கி வருபவர். அதனாலேயே நாம் அவரை தேவ வரப்பிரசாதத்தின் தாய் என்று அழைப்பது பொருத்தமாகும்.

**வேத நாயகம் பிள்ளை:** நீதிநூல், முதலியார் சரித்திரம், சர்வ சமய சமரச கீர்த்தனை போன்ற நூல்களை இயற்றியவர்

சூரியன் தன்னொளி வாங்கிவுலகுக்குச்
சோதி தருமதி போலும் - மேகம்
நூறு மழைகொண்டு வகுக்குதவும்
துறவு குளங்களைப் போலும் - அன்னை
சோரா வரங்களைச் சுதனிடம் வாங்கிச்
சொரிவாள் நமக்கு மென் மேலும்.

பணிப்பெண். கீழ்படியாமையால் நாம் இழந்ததை கீழ்படிதல் மூலம் பெற்று தந்தவர் மரியாள் என கூறுகிறார்.

திருத்தந்தை 10-ம் பத்திநாதர் தனது சுற்று மடலில் (AD DIEM ILLUM, பெப் 2, 1904) அமல உற்பவி திருநாளில் 50-ம் ஆண்டின் நினைவின்போது உலகில் உள்ள எல்லா கத்தோலிக்க கிறிஸ்துவ விசுவாசிகளுக்கும் இவ்வாறு சொன்னார். கடவுளின் அருள் நம்மிலிருந்து எட்டாக் கனியாக வெகு தொலைவில் இருந்தது. இதனை நம்மிடையே கொண்டு வந்தவர் கிறிஸ்து. இதற்கு ஊடகமாக இருந்தவர் நம் அன்னை மரியா. ஏனெனில் அவர் மானிட குலத்தை தூய்மையென்னும் ஆடை கொண்டு முதற்கனியான இயேசுவின் மூலம் உடுத்தினார். மேலும் கிறிஸ்துவில் நாம் நெருக்கமான நிலையில் இணைந்திருக்கச் செய்தார். அவர் கடவுளின் மீட்புத் திட்டத்தில் தன்னை முழுவதுமாய் ஈடுபடுத்தியதன் வழி தன்னையே ஏற்புடையவராகவும் மாற்றிக் கொண்டார். இதனைக் கடவுளும் அவர் எல்லா அருள் வரங்களும் பெற திருவுளம் கொண்டார்.

திருத்தந்தை 13-ம் லியோ தனது சுற்றுமடலில் செபமாலையின் முக்கியத்துவத்தை பற்றி கூறுகிறார். மரியா கிறிஸ்துவின் சொல்லண்ணா துயரத்தில் மனித நிலையில் கிறிஸ்துவின் தாய் என்ற முறையில் எவ்வாறு மனித மீட்பு வரலாற்றில் பங்கு பெற்றார் என்பதை தெளிவாக கூறுகிறார். இவர் சொல்லுகையில் மரியா நம்மீது கொண்ட எல்லையில்லா அன்பால் நெருப்பின்மேல் (இயேசுவின் பாடுகளின்போது) இருந்தார். ஏனெனில் தன் குழந்தையைத் தேவநீதியின்படி நாம் ஒவ்வொரும் கடவுளின் பிள்ளைகளாகும் பொருட்டு கிறிஸ்து என்னும் தன் ஒரே மகனை கடவுளாகிய தந்தையோடு சேர்ந்து மனித நிலையில் மரியா ஒப்புக் கொடுக்கலானார். மேலும் கிறிஸதுவின் பாடுகள், வேதனை, மரணம் என எல்லாவற்றிலும் ஆன்ம நிலையில் அவரும் பங்கெடுத்தார். இவ்வாறு கிறிஸ்துவே தன்னை ஒன்றாக நெருக்கமாக ஐக்கியப்படுத்தியதால் அவர் எல்லா மனிதருக்கும் அருளைப் பெற்று தரும் ஒப்பற்ற பொக்கிஷமாக ஊடகமாக கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**புனித பெர்னார்டின் சியன்னா மற்றும் புனித அல்போன்ஸ் லிகோரி:** எல்லா அருளும் இரக்கமும் மனித பலவீனத்தால் சீர்குலைந்திருந்த போதும் இவையெல்லாம் பழைய சட்டத்தின்படி மரியா வழியாக பாவிகளுக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது.

**புனித தெர்த்தூலியன்:** தீய மரம் அருள்தரப்படாத நிலையில் பலனளிப்பது இயலாத ஒன்று. அதேபோல் நல்ல மரமும் தீய கனி தருவது இல்லை. கற்கள் கூட ஆபிரகாமின் பிள்ளைகளாகிறது. ஆபிரகாமின் விசுவாசம் இருப்பின் தீயவர்கள் கூட பாவ மன்னிப்பின் கனிகள் பெறுவர். தங்களுடைய தீய இயல்பைத் தங்களிடமிருந்த களைந்தார்களேயானால் இந்த செயல் கடவுள் தரும் அருளின் வல்லமையால் சாத்தியமாகிறது. அருள் மிகவும் வலிமை வாய்ந்தது. எத்தகைய வலிமையென்றால் தீமைகளை தன்னகம் கொண்ட இயல்பையும் கூட மாற்றுகிறது. இவருடைய வார்த்தைகள் அருளின் சிறப்பியல்பை சுட்டிக் காட்டுகின்றன. கனிதரவேண்டுமென்றால் அருள் அவசியமாகிறது. இதனை மரியா மனித நிலையில் நம்மை முற்றும் அறிந்ததால் பெற்று தர முடிகிறது.







முகப்பானது கப்பானா என்கிற வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது. முகப்பானது ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தின் உயரத்தை விட அகலமானது இருமடங்காக உள்ளது. மேலும் ஆலய மையமண்டபத்தை விட உயரமாகவும் கட்டப்பட்டுள்ளது. இம்முறையில் எவ்வித வேலைபாடுகளும், வண்ணமுமின்றி வெறுமையாக கட்டப்பட்டுள்ளது. முகப்பின் இருபுறமும் சிறிய கதவுகளும், மையத்தில் பெரிய கதவுகளுமாக மொத்தம் மூன்று நுழைவாயில்களுடனும், இருபறமும் இரு சிறிய சன்னல்களுடன் இப்பேராலயம் அமைந்துள்ளது. மைய நுழைவாயிலானது ஒரு சிறிய கோபுர அமைப்பை நீட்சியாகக் கொண்டுள்ளது.

மைய நுழைவாயிலில் அமைந்துள்ள பளிங்கு தூண்களும், அரைவட்ட வடிவமான மேற்கூரை போன்ற அமைப்பு விமர்காதி குடும்பத்தினமிருந்து, லுதோவிகோ மோரோவால் பணிகளின் பொறுப்பை ஏற்றுகொண்டபின் கட்டப்பட்டன.

கி.பி. 1492ஆம் ஆண்டு லுதோவிகோ மோரோ மிலான் நகரின் ஆட்சியாளராக பொறுப்பேற்ற பின், சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அருளின் அன்னையின் பேராலயத்தின் பலிப்பீடப்பகுதியையும், துறவியர் செபிக்கும் இடத்தை அந்நாளில் சிறந்து விளங்கிய கட்டிட கலைவடிவத்தில் கட்ட விரும்பினார். எனவே, இரு அடுக்கு முறையில் கட்டப்பட்ட பகுதியை இடித்துவிட்டு புது அரைவட்ட வடிவில் கட்ட முனைந்தார். அதற்கான அடிக்கல்லானது கி.பி. 1492ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் தேதி மிலான் பேராயர் மேதகு குயிதந்தோணியோ ஆர்சிபோல்தி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு பணிகள் தொடங்கின.

இப்பணிகளானது அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய பிரமாந்தே என்கிற கட்டிட கலை வல்லுனரால் தொடங்கப்பட்ட பின் அமதேயு என்பரால் தொடரப்பட்டன. இந்த அரைவட்ட வடிவமான செபிக்கும் இடத்தின் உயரமானது பிரமிப்பூட்டும் விதமாக அமைந்துள்ளது. இதன் இருபுறங்களிலும் பக்கத்திற்கு இருவர் என நான்கு திருஅவையின் மறைவல்லுனர்களின் உருவங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்தில் ஒரு பகுதியில் மோரோ இளம் மனைவியான சீமாட்டி பெயாத்ரிசேவின் கல்லறை அமைந்துள்ளது. இருபத்திஇரண்டே வயதான அவர், மகப்பேற்றின் போது காலமானார். அவர் மீது ஆழ்ந்த அன்புகொண்டிருந்த ரபு மோரே அவரை தான் புதுப்பித்துகொண்டிருந்த ஆலயத்திலேயே அடக்கம் செய்தார். பின், மோரே பிரான்சு தேசத்திற்கு சிறைபிடிக்கப்பட்டு அங்கேயே மரணமடைந்ததை தொடர்ந்து, அவர் மனைவியின்





கல்லறையும் மிலானிலிருந்து பவியாவிற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டாலும், அக்கல்லறை மேலிருந்த சிற்பங்களும், அழகு வேலைப்பாடுகளும் இன்றும் அங்கேயே உள்ளன.

லுதோவிகோ மோரேவின் தோல்விக்கு பிறகு, மிலான் நகரமானது பல்வேறு ஆட்சியாளர்களின் கைகளில் மாறி மாறி இருந்தது. 15-16ஆம் நூற்றாண்டுகளின் இந்த ஆலயத்தின் பல்வேறு பணிகளும், பராமரிப்பு பணிகளும் நின்று போயிருந்தன. ஆஸ்திரியா நாட்டு அரசியான தெரேசா உட்பட்டோர் இந்நிலை சீரடைய உதவினர் என்றாலும், நெப்போலியனின் படையெடுப்பு அவற்றையெல்லாம் நலிந்து போகச்செய்தன. ஆலயத்தில் இருந்த பல்வேறு கலைப் பொருட்கள் நெப்போலியன் படையால் பிரான்சு தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. கி.பி. 1799 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் இத்துறவற இல்லமானது முழுமையான தடைசெய்யப்பட்டு, மூடப்பட்டதோடு இவ்வாலயமும், துறவற இல்லமும் இராணுவ இடங்களாக அறிவிக்கப்பட்டன. அதன்பின் கி.பி. 1860ஆம் ஆண்டு அவற்றின் பெரும்பாலான பகுதிகள் மீட்டெடுக்கப்பட்டு ஆலய வழிபாட்டுக்கு அளிக்கப்பட்டன. கி.பி. 1924ஆம் ஆண்டு தோமிக்கன் துறவிகளிடம் ஆலயமும், துறவற இல்லமும் வழங்கப்பட்டன.

இந்த பேராலயத்தின் மையப்பகுதியின் இருபுறமும் சிற்றாலய பீடங்கள் அன்னை மரியாவுக்கும் மற்றும் பல புனிதர்களுக்கும் அர்பணிக்கபட்டு கட்டப்பட்டுள்ளன. இடது புறத்தில், குழந்தை இயேசுவை ஆராதிக்கும் அன்னையின் சிற்றாலயம், புனித மார்டின் தே போரஸ் சிற்றாலயம், வானதூதர்களின் சிற்றாலயம், புனித கொரோனா சிற்றாலயம், புனித தோமினிக் சிற்றாயலம், புனித வின்சென்சோ பெரேர் சிற்றாலயம் மற்றும் புனித திருமுழுக்கு யோவான் சிற்றாலயம் போன்றவை அமைந்துள்ளன. வலது புறத்தில், புனித கத்ரீன் அம்மாள் சிற்றாலயம், நற்செய்தியாளரான புனித யோவான் சிற்றாலயம், புனித யோசேப்பு சிற்றாலயம், அருளின் அன்னையின் சிற்றாலயம் போன்றவை அமைந்துள்ளன.

அருளின் அன்னை பேராலயம் மிகப்புகழுடன் இன்றும் விளங்குவதற்கு காரணம், இந்த ஆலயம் அமைந்துள்ள தோமினிக்கன் துறவற இல்லத்தின் உணவு அறையில் உள்ள ‘ஆண்டவரின் இறுதி இராவுணவு’ ஓவியமாகும். அழியா புகழ்பெற்ற, ஓவியத்திற்கும் உயிர் தருகின்ற ஒப்பற்ற ஓவியரான லியோனார்தோ தாவின்சி அவர்களால் வரையப்பட்டது. இந்த ஓவியமானது 460 செ.மீ அகலமும் 880 செ.மீ உயரமும் கொண்டதாக வரையப்பட்டுள்ளது. இப்புகழ்மிக்க ஓவியத்தை மோரோ அவர்களின்







# மாதா மன்றாட்டு மாலை

6



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## 6. தேவ வரப்பிராசதத்தின் மாதாவே

தேவ வரப்பிரசாதம் என்பது அருள் வரங்களைக் கொண்டுள்ள வாய்க்கால் எனப் பொருள்படும். மன்றாட்டு மாலையில் மரியா தேவ வரப்பிரசாதத்தின் தாய் என்று அழைக்கப்படுகிறார். இதன் இறையியல் அர்த்தம் என்ன? மக்கள் ஏன் இப்படி வெளிப்படையாக தங்கள் கருத்தை ஆழமான முறையில் வெளிப்படுத்த வேண்டும்?

மரியா இறைமகனைத் தன் உதிரத்தில் தாங்கி பெற்றெடுத்தார். கிறிஸ்துவில்தான் அனைத்தும் உண்டாக்கப்பட்டன. அவர் வழியாகவே அனைத்தையும் பெறுகிறோம் என்பதை ஒருபோதும் மறத்தல் ஆகாது. எந்த வகையான அருளும் அல்லது வரப்பிரசாதமும் இறைவனின் பாடுகள் தந்த கனிதான். மரியா அப்போது பெற்ற இறைமகனையே தன் உதிரத்தில் தாங்கி உலகிற்கு உன்னதம் செய்ய தன்னையே அர்ப்பணித்ததை எண்ணிப் பார்த்து மிகவும் பெருமைப்பட மட்டுமல்ல சந்தோசம் அடைய வேண்டியது அவசியம். கடவுள் நினைத்திருந்தால் தன் மகனை ஆதாம் ஏவாளைப் படைக்கும்போது திட்டம் வகுத்து செயல்பட்டது போன்று அதையொத்த திட்டத்தால் இறைமகனையும் பிறக்க செய்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக ஒரு மனித உதிரத்தின் வழியாகவே பிறக்க திட்டம் வகுத்திருந்தார். அத்திட்டம் மரியா வழியாக ஈடேறியிருக்கிறது. இயேசுவையே தன் வழியாக உலகம் பெற வாய்ப்புத் தந்தவர் மரியா. இவர் இயேசுவை விசுவசிக்கும், ஏற்றுக்கொள்ளும், அவரோடு இணைந்திருக்கும் அனைவருக்கும் அன்னைதான். இதே கருத்தை 10-ம் பத்திநாதரின் Ad Diem Illum என்ற மடலில் தெளிவாகக் காணப்படுகிறது. ஆதலால் மரியா தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே என்று அழைப்பது பொருத்தமானதே. அதுமட்டுமல்லாமல் இன்றளவும் இது மிகவும் செல்வாக்கு கொண்ட ஒன்றாகவே உள்ளது. மரியாவின் பங்கு இயேசுவுக்கு மனித உடல் பிறப்பு தந்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. மாறாக இயேசுவின் மீட்புப் பணியில் தன்னையே கல்வாரி மலையில் தியாகப் பலியாய் ஒப்புக்கொடுக்க மரியா முழு ஒத்துழைப்புக் கொடுத்து நமக்கு அருளை பெற்று தந்தார். இவ்வாறு விண்ணக செல்வமான அவளை பெற்று தர இயேசு தன் அன்னையை பணித்தார் என்று கூட அர்த்தம் கொள்ளலாம்.

திருத்தந்தை 13-ம் லியோ, மனித மீட்புப் பணியில் மரியா ஆண்டவரின் பணியாள். ஆனால் ஏவாள் கீழ்படியாமையில் ஆதாமின்



# அருட்தந்தை இஞ்ஞாசியார் கலபுஇ OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

அருட்தந்தை இஞ்ஞாசியார் ஸ்பெயினில் டெனியா நகரில்,அலிகாண்டே மாகாணத்தில், வலென்சியா மறைமாவட்டத்தில் 4 மார்ச் 1931 ல் பிறந்தார். இது கிரேக்க மற்றும் அரபு கலாச்சாரத்தால் உரமிடப்பட்ட ஒரு சிறப்பு வாய்ந்த பகுதியாகும். ஆவர் ஏழு ஆண்டுகள் (1941-1948) வலென்சியாவில் அறிவியல்-இலக்கியப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர் இரண்டு ஆண்டுகள் (1949-1950) பல்கலைக்கழகத்தின் தத்துவ படிப்பை முடித்தார். 1950 அக்டோபர் 22 ஆம் தேதி நமது மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். 23 அக்டோபர் 1951 அன்று இத்தாலியில், சலுட்சோவில் தனது முதல் வார்த்தப்பட்டிருக்கு பின்னர், ரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கு 6 ஆண்டுகள் (1951-1957) மிகுந்த ஆர்வத்துடன இறையியலைப்படித்தார். இரண்டு ஆண்டுகள் (1957-1959) சுவிட்சர்லாந்து பல்கலைக்கழகத்தின் திருஅவை தந்தையர்களின் இலக்கிய இறையியல் சிறப்புப் படிப்புகளில் பட்டம் பெற்றார், அதேநேரத்தில் ஸ்பானிஷ் மொழி பேசும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் சேவையை மேற்கொண்டார். மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு (1963-1964) வழிபாட்டுமறை குறித்த சிறப்புப் படிப்புகளை ரோமையில் தலைசிறந்த கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். இவ்வாறு தொடர்ந்து படித்து 27 ஜூன் 1964 இல் முனைவர் பட்டம் பெற்றார். இவ்வாறு சிறந்து விளங்கியதால், இறைவழிபாடு மற்றும் மரியியல் அறிவியலில் பேராசிரியராக 1958- இறுதி நாள் வரை பணியாற்றினார். அவர் 2002 இல் அவருடைய பணியின் முடிவு வந்தபோதும், அவரின் திறமையை கண்டு, தொடர்ந்து கற்பிக்கும்மாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவரது போதனை அவரது வாழ்க்கையின் பெரும்பகுதியுடன் ஒத்துப்போனது. பல்வேறு கல்விச் சுழற்சிகளைக் கொண்ட பல தலைமுறை மாணவர்களுக்கு அவர் ஒரு உண்மையான ஆசிரியராக மற்றும் கல்வியாளராக இருந்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றினார். இவ்வாறு சிறப்பாக கல்வி தொண்டு ஆற்றிக் கொண்டு இருக்கையில், எதிர்பாராதவிதமாக பிப்ரவரி 6, 2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். வத்திக்கானில் நமது திருஅவைக்காக பல பணிகளை இவர் செய்துள்ளார். அதிலும் மிகமுக்கியமாக, திருத்தந்தையின் வழிபாடுகளுக்கு ஆலொசகராக இறுதி வரை பணி செய்தார். அவரது வெளியீடுகள் 500 க்கும் மேற்பட்ட படைப்புகளைக் கொண்டுள்ளன, மேலும் திருத்தந்தை மற்றும் வத்திக்கான் ஆவணங்களைத் தொகுப்பதில் பல முக்கிய பணிகளை ஆற்றியுள்ளார். இவர் நினைத்திருந்தால் இன்னும் பல படைப்புகளை தன்னுடைய பெயரில் படைத்திருக்க முடியும். ஆனால், இறுதிவரை, பொது காரியங்களுக்காகவே, தன்னுடைய எழுத்துக்களை, சிந்தனைகளை அர்ப்பணித்தார். சுய பெருமைகளைவிட இறைவனின் மகிமை திருஅவை வழியாக வெளிப்படவேண்டும் என்று, சுயநலமில்லாமல், வாழ்ந்து மரித்த நமது அருட்தந்தை, நமக்கெல்லாம் துறவறவாழ்வின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இவரை புனிதராக்க நமது மரியின் ஊழியர் குடும்பம் முயற்சி செய்து வருகிறது.







வேண்டுதலின்படி லியோனார்தோ தாவின்சி அவர்கள் கி.பி 1494-1498 ஆண்டுகளில் தீட்டினார். இவ்வோவியம் அமைந்துள்ள இந்த அறைக்கு போதிய வெளிச்சம் தர எட்டு சன்னல்கள் கொண்ட மேற்கூரை கட்டப்பட்டது. இம்மேற்கூரையானது பலமுறை அதன் வடிவம் மாறாமல் புதுப்பிக்கப்பட்டது.

இந்த ஓவியத்தின் மற்றொரு சிறப்பு உள்ளது, ஏன் அதை அதிசயம் என்று கூட கூறலாம். இரண்டாம் உலகப்போரின் போது நாசிப்படைகளின் குண்டுகளால் இந்த ஆலயமும், துறவற இல்லம் கடுமையாக தாக்கப்பட்டன. ஆலயத்தின் பெரும் பகுதியும், துறவற இல்லம் முழுவதுமே தரைமட்டமாயின் இப்பேரழிவில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் விதமாக, ஆண்டவரின் இறுதி இராவுணவு ஓவியம் அமைந்த சுவரும், தோனதோ மோன்தேர்பானோவினால் வரையப்பட்ட சிலுவையில் தொங்கும் ஆண்வரின் திருஉருவம் அமைந்திருந்த சுவர் மட்டும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் மிஞ்சி இருந்தன. உலகப்போர் முடிவுற்ற பிறகும், பல ஆண்டுகள் வெயிலிலும், மழையிலும் இந்த ஓவியங்கள் திறந்த வெளியிலேயே இருந்த காரணத்தினால் சிதிலமடைய தொடங்கின.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, ஆலயமும், துறவற இல்லமும் மீண்டும் கட்டிஎழுப்பப்பட்டாலும், ஓவியத்தை புதுப்பிக்கும் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருந்தது. பின், கி.பி. 1977ஆம் ஆண்டு, பல்வேறு ஆய்வுகளுக்கும் பின், நவீன தொழிற்நுட்ப வசதிகளின் உதவியால், மிகுந்த பொருட்செலவுடன் புதுப்பிக்கும் பணிகள் கி.பி. 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கி.பி. 1999ஆம் ஆண்டு நிறைவுற்றன. வரலாற்றில் மிக நீண்ட காலம் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்ற ஓவியமாக இது கருதப்படுகிறது. கி.பி. 1980 ஆம் இந்த ஓவியமானது ஐக்கிய நாடுகள் சபையின் கலைப்பராம்பரிய பிரிவான யுனெஸ்கோவால், உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட ஓவியமாக இருந்தாலும், இதில் உள்ள கலைநுணுக்கங்களும், உயிரோட்டமுள்ள முகங்களும் இன்றும் நமக்கு சிலிர்ப்பை ஏற்படுத்துகின்றன.



பொருளாதார மற்றும் தொழிற் வளர்ச்சியிலும், நாகரீக பண்பாட்டின் தலைநகராகவும் மிலான் விளங்கினாலும், இந்நகரின் அரிய பொக்கிசங்களில் ஒன்றாகவும், நாள்தோறும் ஆயிரக்கணக்கானவர் தரிசிக்கும் இடமாகவும் உள்ள ஆலயம், மிலான் நகரின் செல்வோரை கவர்ந்திழுப்பதில் ஆச்சரியமில்லை. அருளின் அன்னை, உம் அருள்மிகு பரிந்துரையில் நாங்கள் எந்நாளும் நிலைத்திருக்க அருள்தாரும்.

திருப்பயணம் தொடரும்...........

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## இணைச்சட்டம் 1-17



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 7 | | | | | | | 6 | |
| | | 11 | | | | | 12 | | |
| | | | 13 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 14 | | | |
| | | 10 | | | | | 9 | | |
| | 8 | | | | | | | 5 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) இதோ! அந்த நாட்டை உங்கள்முன் வைத்துள்ளேன். ............- உங்கள் மூதாதையராகிய, ஆபிரகாமுக்கும்,ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் வழி மரபினருக்கும் கொடுப்பதாக ஆணையிட்டுக் கூறியபடி நீங்கள் போய் அந்த நாட்டை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்

4) நம் மூதாதையருக்குக் கொடுப்பதாக அவர் ஆணையிட்டுச் சொன்ன நாட்டுக்கு எங்களை அழைத்து வந்தார்: அதை நமக்குக் கொடுக்கும்படி எங்களை அங்கிருந்து வெளியே .............

5) இந்த நாற்பது ஆண்டுகளும் ............. மேலுள்ள ஆடை நைந்து போகவில்லை: உங்கள் காலடிகள் வீங்கவும் இல்லை.

6) நீ அவனுக்கு விடுதலை கொடுத்து அனுப்பிவிடுவது உனக்கு வருத்தம் தரலாகாது. ஏனெனில், அவன் ஒரு வேலையாளின் பாதிக்கூலிக்கு ஆறு ஆண்டுகள் உனக்குப் பணி செய்திருப்பான். மேலும் உன் கடவுளாகிய ஆண்டவர், நீ ............ எல்லா முயற்சிகளிலும், உனக்கு ஆசி வழங்குவார்.

9) நெருப்பிலிருந்து ஆண்டவர் உங்களோடு பேசினார். பேச்சு ஒலியை நீங்கள் கேட்டீர்கள்: ...........எதையும் காணவில்லை:

12) உங்கள் பிள்ளைகள், கடவுளாகிய ஆண்டவரின் படிப்பினைகள் அறிந்ததுமில்லை: பார்த்ததுமில்லை. அவர்தம் மாட்சி, வலிய ..........., ஓங்கிய புயம்,

14) அதன் இரத்தத்தையோ உண்ண ................ தண்ணீரைப் போல் அதைத் தரையில் ஊற்றிவிடு.

**இடமிருந்து வலம்**

2) அப்பொழுது நான் உங்களை நோக்கிக் கட்டளையிட்டது: உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இந்த நாட்டை நீங்கள் உரிமையாக்கிக் கொள்ளுமாறு ..............

3) நீ உரிமையாக்கிக் கொள்ளைப்போகும் நாட்டில், உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னைப் புகச்செய்து, உன்னைவிட வலிமையிலும் எண்ணிக்கையிலும் மிகுந்த மக்களாகிய இத்தியர், கிர்காசியர்,





நாமும் பேதுருவைப் போல எவ்வித பேதமின்றி எல்லாரையும் அன்பு செய்து வாழ்வின் மகிழ்ச்சியை எல்லாரும் பகிர்ந்து கொள்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

அன்பிற்கும், கடவுளைப் பற்றிய அறிவுக்கும் ஒரு நேரடித் தொடர்பு இருப்பதை நாம் இன்றைய இரண்டவாது வாசகத்தில் அறிகிறோம். அன்பு செய்கிறவன் கடவுளை அறிவான். அன்பு செய்யாதவன் கடவுளை அறிவதில்லை என்கிறார் யோவான். கடவுளை அறிதல் என்பது வெறுமனே மனித அறிவாற்றல் அல்ல, மாறாக கடவுளைப்பற்றிய உண்மையான அறிவு உள்ள வரை எல்லாரையும் அன்பு செய்ய தூண்டும். ஏனெனில் கடவுள் அன்பாக உள்ளார், அவர் அன்புக்குரியவர்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் அன்புக் கட்டளையை வாழ்வாக்கி அன்பின் இறைச்சமூகத்தை கட்டி எழுப்பிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ வாழ்வில் இருக்கின்ற அனைத்து ஏற்றத் தாழ்வுகளையும் ஒழித்து எல்லாரும் ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழ்கின்ற கிறிஸ்தவ குடும்பங்கள், தங்களிடையே இருக்கின்ற கருத்து வேறுபாடுகளையும் வேற்றுமைகளையும் களைந்து ஒருவரை ஒருவர் மன்னித்து ஒற்றுமையோடு இணைந்து வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உமது மகனின் உயிர்ப்பு காலத்திலுள்ள நாங்கள் ஒவ்வொருவரும், உமது அன்பு கட்டளையை வாழ்வாக்கி உமது மகிழ்ச்சியில் நாங்கள் நிறைவு காண அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, எங்களை பிறரிடமிருந்து அந்நியப்படுத்துகின்ற அனைத்து தீமைகளிலிருந்தும் விடுவித்து நாங்கள் எல்லாரையும் அன்பு செய்து உமது அன்பில் நிலைத்து நின்று உமது அன்புக்குரிய மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வுயிர்ப்புக் காலத்திலே முழுமையான மனமாற்றம் பெற்று கிறிஸ்துவின் உயிர்ப்பின் சாட்சிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, உமது உயிர்ப்பின் மறைபொருளை கொண்டாடும் நாங்கள், அம்மறைபொருளை வாழ்வாக்கி உமது அன்பின் அரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## உயிர்ப்புக்காலம் 6-ம் ஞாயிறு (05.05.2024)
## திப 10:25-26,34-35,44-48 1யோவான் 4:7-10 யோவா 15:9-17

### முன்னுரை

உலகம் உயர்வு பெற வேண்டுமானால் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு பரிணமிக்க வேண்டும். எல்லாரும் நம் சகோதரர்கள் என்னும் பரந்த மனப்பான்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொள்ள வேண்டும். இன்றைய காலக்கட்டத்தில் அன்பு மயமாகி இருக்க வேண்டிய மனிதன் அக்கிரமே உருவெடுத்து காணப்படுகின்றான். இத்தகைய சூழ்நிலையில் இன்றைய இறைவார்த்தை வழிபாடு, இறைவன் நம்மீது அன்பு கொண்டிருப்பது போல நாமும் ஒருவர் மற்றவரிடம் அன்பு பொண்டிருக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றது. இது இறைவனின் அன்பை வாழ்வதற்கான அழைப்பு. குறைகளுள்ள மனித அன்பிலிருந்து நிறைவான இறைவனின் அன்பை நோக்கி தன்னலம் நிறைந்த மனித அன்பிலிருந்து தியாகத்தில் மிளிரும் இறைவனின் அன்பை நோக்கிய பயணமே உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை. அத்தகைய இறையன்பு கொண்ட வாழ்க்கையை வாழ இறைவன் இன்று நம்மை அழைக்கின்றார்.

எனவே பிறருக்கு சிறப்பாக நலிந்தோருக்கு நன்மை செய்வோம். அன்பும் இரக்கமும் காட்டுவோம். அதுவே நாம் ஒவ்வொருவரும் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அவரால் அன்பு செய்யப்பட்டவர்கள் என்பதற்கு சாட்சியாய் அமையட்டும்.

### முதல் வாசக முன்னுரை

நம் அன்பான கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை என்கின்றது இன்றைய முதல் வாசகம். யூதர்கள் தங்கள் சமூகத்தைச் சாராத ஏனைய மக்களை வெறுத்து ஒதுக்கிய நிலையில், யூதரான பேதுரு புறவினத்துக் கிறிஸ்தவரான கொர்னேலியுவை தேடிச் சென்று அவருக்கு திருமுழுக்கு கொடுத்த நிகழ்வு இறைவனது எல்லையற்ற அன்பை எடுத்துக்காட்டுகின்றது.





எமோரியர்,................ பெரிசியர், இவ்வியர், எபூசியர் எனும் முன்னே விரட்டியடித்து,

7) ஆறு நாள்களுக்கு நீ புளிப்பற்ற அப்பத்தை உண்பாய். ................ நாள் உன் கடவுளாகிய ஆண்டவருக்காகத் திருப்பேரவை கூடும். அன்று நீ வேலை ஏதும் செய்யாதே.

8) அரக்கர்களில் பாசானின் மன்னனாகிய ஓகு மட்டுமே எஞ்சியிருந்தான். அவனது கட்டில் இரும்பினால் ஆனது. அதுமனிதரின் கைமுழத்தின்படி,................ முழ நீளமும் நான்கு முழ அகலமும் கொண்டது.

10) இஸ்ரயேலே, அவற்றிற்குச் செவிகொடு! அவற்றைச் செயல்படுத்த முனைந்திடு! அதனால், உன் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு வாக்களித்தபடி, பாலும் தேனும் நிறைந்துவழியும் நாட்டில் நீ............. பல பெற்று மேன்மேலும் பெருகுவாய்.

11) நாற்பது பகலும் நாற்பது ............. கழிந்த பின், உடன்படிக்கைப் பலகைகளான இரு கற்பலகைகளை ஆண்டவர் என்னிடம் தந்தார்.

13) இஸ்ரயேல் முழுவதும் இதைக் கேட்டு ............. அதனிடையே இதுபோன்ற தீயசெயல்கள் இனி ஒருபோதும் நடவாதிருக்கட்டும்.

**மேலிருந்து கீழ்**

3) மாறாக,என்மீது அன்பு கூர்ந்து என் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர்க்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு .............

4) உங்கள் கடவுளாகிய ஆண்டவர் அந்த மக்களை, உங்கள் கண்கள் காண, கொஞ்சம் ............ அழிந்து போகச் செய்வார். உடனடியாக அவர்களை அழித்துவிட வேண்டாம். அப்படிச் செய்தால், உங்களிடையே காட்டு விலங்குகள் பெருகிவிடும்.

6) ............,உங்கள் மூதாதையருக்கும் அவர்கள் வழிமரபினருக்கும் கொடுப்பதாக ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்ன மண்ணில் நீங்கள் நெடிது வாழ்வீர்கள். அது பாலும் தேனும் நிறைந்து வழியும் நாடு.

7) ஊனமோ வேறு எந்தக் குறையோ உள்ள மாட்டையாவது ஆட்டையாவது உன் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலி செலுத்த வேண்டாம். ............ அதை உன் கடவுளாகிய ஆண்டவர் வெறுக்கிறார்.

11) மற்றெல்லா மக்களினங்களையும்விட நீங்கள் ஆசி பெற்றவர்களாய் இருப்பீர்கள். உங்களுக்குள்ளும் உங்கள் கால்நடைகளுக்குள்ளும் ஆணிலும் பெண்ணிலும் மலடு ...........

13)பன்றி விரிகுளம்பு உள்ளதாயினும், அசைபோடுவதில்லை: ........... உங்களுக்குத் தீட்டானது. இவற்றின் இறைச்சியை உண்ணவும் வேண்டாம்: இவற்றின் இறந்த உடலைத் தொடவும் வேண்டாம்

**கீழிருந்து மேல்**

1) நாம் காதேசு பர்னேயாவினின்று புறப்பட்டு செரேது ஓடையைக் கடப்பதற்கு ஆன காலம் முப்பத்தெட்டு ............

2) நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும் முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத் ............ எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக் கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

5) அந்த மக்கள், எண்ணிக்கையிலும்............. மிகுந்த ஏனாக்கின் வழிமரபினர். அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

8) விருப்பு வெறுப்பின்றித் தீர்ப்பிடுங்கள்: உயர்ந்தோனுக்கும் தாழ்ந்தோனுக்கும் ............. செவிகொடுங்கள்: எந்த மனிதனுக்கும் அஞ்ச வேண்டாம், ஏனெனில், நீதித்தீர்ப்பு கடவுளுக்கே உரியது.

9) என்னைத் தவிர வேறு கடவுள் ............ இருத்தல் ஆகாது.

10) உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள். அதுவே அவர்தம் வழிகளில் ..............அவருக்கு அஞ்சி வாழ்வதாகும்.

14) அல்லது, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்தில் உங்கள் கண்முன்னே உங்களுக்குச் செய்த அனைத்தையும் போல, சோதனைகள், அடையாளங்கள், அருஞ்செயல்கள், போர், வலிய கரம், ஓங்கிய புயம் மற்றும் அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள் மூலம் ஓர் இனத்தை ............நாட்டினின்று தமக்கென உரிமையாக்கிக்கொள்ள முன்வரும் கடவுள் உண்டா?

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-04-2024**

# மீட்பரின் தாய் ⑫



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

மட்கும் மனிதனை படைத்தது முதலே
மீட்புப் படலமும் நுழைந்தது அதிலே
அலகையின் சூழ்ச்சிக்கு விரித்திட்டான் அரவன் - அதுமுதல்
அவனியின் வீழ்ச்சிக்கு வித்திட்டான் மனிதன்

அருளின் வாழ்க்கையை முறித்திட்டான் மனிதன்
அவனை மீட்டிட விரும்பிட்டார் இறைவன்
மீட்பர் ஒருவரை மொழிந்திட்டார் இறைவன் - அன்றே
ஏற்கும் கருவறை விழைந்திட்டார் தலைவன்

ஆண்டுகள் பலவும் போனதே கனவாய்
சான்றுகள் பலவும் ஆனதே நனவாய்
தூய்மை பரிசினை ஏகவன் தெரிந்தார் - அவருக்கு
ஏழ்மை பரிதனை தூயவன் புரிந்தார்.

தூதுரை அனுப்பி பேறுற மொழிந்தார்
தூயவர் அழைப்பினை பேதையும் உணர்ந்தார்
கன்னி ஆயினும் கருவுற உவந்தாள் - அதனால்
என்ன நேரினும் அடிமையாய்ப் பணிந்தாள்

மாடடைக் குடிலில் மன்னனை ஈன்றாள்
மழலையைக் கோவிலில் மனதுற ஈந்தாள்
அற்புதம் நிகழ்ந்திட அடிக்கல் நாட்டினாள்- கடவுளின்
சொற்பதம் பிழறாமல் அடிகள் சாற்றினாள்

ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு படியும்
தன்னொரு மகனோடு கூடவே இருந்தாள்
போதனை களத்தையும் பார்த்து மகிழ்ந்தாள் - மன
வேதனை களத்திலும் வேர்த்துதான் அழுதாள்

கருவறைத் தொடங்கி கல்லறை வரையிலும்
பிறப்புத் தொடங்கி உயிர்ப்பு வரையிலும்
மீட்புத் திட்டத்துப் பூரணள் ஆனாள்
மீட்பரின் பட்டத்து தாயவள் ஆனாள்



மரிவழி இறைப்பணி

வல்லமையும் பெறுகின்றோம். மேலும் தண்டனை தீர்ப்பிலிருந்து விடுதலை அடைகிறோம். இந்நன்மைகளை நாம் பெற்றிட இறைவனோடு இணைந்திருப்போம். செபத்திலும், அன்புக் கட்டளையிலும் நிலைத்திருந்து இறைவனது அன்பால் நிறைவு காணுவோம்.

தண்ணீரும், மீனும் போல, மரமும் கிளையும் போல, தாமரையும் தண்ணீரும் போல, இறைவனது இதய உறவில் நிலைத்திருந்து மிகுந்த கனி தருவோம்.

**முதல் வாசக முன்னுரை**

சவுல் மனந்திரும்பியபின் சீடர்களும் எல்லா மக்களும் அவரை எவ்வாறு ஏற்றுக் கொண்டனர் என்பதை இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்தரைக்கிறது. தவக்காலத்தில் பவுலை ஏற்றுக் கொள்ள பலர் தயங்கினாலும் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு பவுலின் போதனைளைக் கேட்டு பலர் மனமாற்றம் பெற்று திருமுழுக்கு பெற்றனர். பவுல் அடிகளார் இயேசுவோடு இணைந்து செயல்பட்டதால் மிகுந்த பலன் தரும் திராட்சை கொடியாக மாறினார். நாமும் மனமாற்றம் பெற்று இறைவனில் இணைந்து மிகுந்த பலன் தருவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மீது எப்படி விசுவாசம் கொண்டு, ஒருவர் மற்றவர் மீது அன்பு கொண்டு வாழ வேண்டும் என்பதை இயேசுவின் அன்பு சீடரான யோவான் இன்றைய 2-ம் வாசகத்தில் கூறுகிறார். இயேசு தமது அன்புச் சீடர்களுக்கு கொடுத்த முதன்மையான அன்பு கட்டளையை நினைவுபடுத்தி, எவ்வாறு கிறிஸ்து நம்மை அன்பு செய்கிறாரோ அப்படியே நாமும் கிறிஸ்துவையும் நமது அயலாரையும் அன்பு செய்து மிகுந்த கனி தரும் திராட்சை கொடிகளாக உருவாகிட அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அழைப்பினை ஏற்று அவரது பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு இவற்றுக்கு சாட்சிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, குடி, போதை மற்றும் பல்வேறு தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருக்கின்ற ஒவ்வொருவரும் தங்களது தீய வாழ்விலிருந்து விடுபட்டு உமது அன்பில் நிலைத்திருந்து உயிர்ப்பின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் செபம், திருவருட்சாதனம், அன்புக் கட்டளை இவற்றில் முழுமையாக பங்கு பெற்று மிகுந்த பலன் தருகின்ற திராட்சைக் கொடிகளாக வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

என்ற மறையுண்மையை உணர்ந்து ஆவிக்குரிய செயல்களை செய்து இறையன்புக்கு உரிய மக்களாக வாழ அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் நல்ல ஆயனுக்குரிய பண்புகளை தமதாக்கி மக்களை இறைவனோடும், அயலாரோடும் ஒன்று இணைக்கும் தலைவர்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எம் நாட்டு அரசியல், சமூக, சமய தலைவர்கள் சுய நலத்தை தவிர்த்து பொது நலன் கொண்டவர்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, மக்களை பிளவுபடுத்துகின்ற சாதி, மொழி, இன வேறுபாடுகளை களைந்து அனைவரும் ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ குடும்பங்களில் தங்களது பொறுப்புகளை உணர்ந்து, பொறுப்புள்ள கணவனாக, பொறுப்புள்ள மனைவியாக, பொறுப்புள்ள பெற்றோர்களாக, பிள்ளைகளாக வாழ்ந்து திருக்குடும்பத்தை பிரதிபலிக்கின்ற குடும்பங்களாக எங்கள் குடும்பங்கள் திகழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது அனுதின வாழ்வில் உயிர்த்த ஆண்டவரின் அன்பு, சமாதானம், நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவற்றை நிறைவாகப் பெற்று உயிர்ப்பின் மக்களாக வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாஸ்கா காலம் 5-ம் ஞாயிறு (28.04.2024)**

**திப 9:26-31 1யோவான் 3:18-24 யோவா 15:1-8**

**முன்னுரை**

வீட்டில் விலையுயர்ந்த விளக்கு இருந்தாலும் மின்சாரத்துடன் அது இணைக்கப்பட்டால்தான் அதனால் நமக்கு பலன் உண்டு. அதேபோல் மனித வாழ்வு விலை மதிப்பற்ற ஒன்றாக இருந்தாலும், இயேசுவோடும் அவர் வழியாக தந்தையோடும் இணைக்கப்பட்டாலன்றி அவ்வாழ்வினால் எப்பயனும் இல்லை. கடவுளுக்கும் நமக்கும் இடையே இருக்க வேண்டிய ஆழமான உறவைப் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன.

இயேசுவோடு இணைந்திருப்பதன் வழியாக நற்செயல்கள் செய்து பலன் தந்திடும் மக்களாக மாறுகிறோம், நிலையான மகிழ்ச்சிமிக்க வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறோம், சோர்வு நேரங்களில் சக்தியும்,





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**உயிர்ப்புக் காலம் 3-ம் ஞாயிறு (14.04.2024)**

**திபா 3:3-15, 17-19 1யோவான் 2:1-5 லூக் 24: 35-48**

**முன்னுரை**

இயேசு உயிர்த்த பிறகு சொன்ன முதல் வார்த்தை உங்களுக்கு சமாதானம். மண்ணுலகில் இருந்த காலங்களில் மட்டும் அவர் சமாதானத்தை முதன்மைப்படுத்தவில்லை மாறாக இறந்து உயிர்த்த பிறகும் சமாதானத்தை முதன்மைப்படுத்தகின்றார். இயேசுவும் சமாதானமும் இரண்டறக் கலந்தவையாகும். அவர் ஒருவர் தான் நமக்கு நிலையான சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் தர முடியும். அவர் பிறந்த போது வானதூதர்கள் உலகிலே அவர் தயவு பெற்றவருக்க சமாதானம் உண்டாகும் என்றனர். அவர் உயிர்த்த பிறகு உங்களுக்கு சமாதானம் என்றார். வாழ்வில் போதித்த பொது சமாதானத்தை உங்களுக்கு விட்டு செல்கின்றேன் என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கின்றேன் என்றார்.

ஆக அவரின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், இறப்பு மட்டுமல்ல உயிர்த்த பிறகும் சமாதானம் என்றார். நம் கடவுள் குழப்பத்தின் கடவுளல்லர், அமைதியின் கடவுள். நம்மில் நம் குடும்பத்தில். திரு அவையில், நாட்டில், உலகில் உண்மை சமாதானம் நிலவ உயிர்த்த இயேசுவிடம் வேண்டுவோம். உயிர்த்த இயேசு கொடுத்த சமாதானம் நம்மில் நிலைபெற வேண்டுமெனில் விசுவாசமின்மையிலிருந்து விசுவாச வாழ்வுக்கு நம்மை அழைத்து செல்ல இறைவனின் உதவி வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி பேதுரு ஆற்றிய ஓர் உரையின் பகுதியே இன்றைய முதல் வாசகம். பேதுரு அஞ்சா நெஞ்சத்தோடு போதித்தார். இயேசுவின் பெயரால் புதுமைகள் செய்தார். இயேசுவுக்காகத் துன்பங்கள் பல பெற்று இறுதியில் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு தன் உயிரையும் தியாகம் செய்தார். இயேசுவை மறுதலித்தவர் உயிர்த்த ஆண்டவரை அடைவதற்கு மன

மாற்றம் பெற்று இயேசுவின் நற்செய்திக்கு சாட்சியம் பகிர்ந்தார் அவரைப் போல மன மாற்றம் பெற்று இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நமக்காக பாடுபட்டு மரித்த இயேசு நம் சார்பாகத் தொடர்ந்து ஒரு பணியை செய்து கொண்டிருக்கின்றார். அவரது தந்தையிடம் நமக்காக பரிந்து பேசிக் கொண்டு இருக்கின்றார். இயேசின் சிலுவை மரணமும் பரிந்துரைப் பணியும் ஒன்றோடொன்று இணைந்துள்ளது என்கிறார் யோவான். இயேசுவின் இரத்தத்தால் நாம் அனைவரும் மீட்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையை உணர்ந்து நம்பிக்கையோடு புதுப்படைப்புக்களாக வாழ அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உயிர்த்த ஆண்டவரை இனம் கண்டு நிலையான சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெற்று வாழ அருள் புரிய வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, உயிர்ப்பின் மகிழ்ச்சியை நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பங்கு வாழ்விலும் பெற்று வாழ்ந்திட மன மாற்றம் பெற எங்களுக்கு அருள் புரிய வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உமது உயிர்ப்பின் மறைபொருளை கொண்டாடி மகிழும் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது விசுவாச வாழ்வின் நிமித்தமாக சந்திக்கின்ற எல்லாவிதமான சவால்களையும் எதிர்கொண்டு நிற்க தேவையான அருள் புரிய வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உமது உயிர்ப்பின் மறைபொருளை நினைவு கூர்கின்ற நாங்கள் ஒவ்வொரும் அம்மறைபொருளை விசுவசித்து அதை பிறருக்கு அறிவித்து உமது உயிர்ப்பின் சாட்சிகளாக வாழ அருள் புரிய வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, பல்வேறு காரணங்களால் அமைதி, சமாதானம், மகிழ்ச்சி, நம்பிக்கை இழந்திருக்கின்ற குடும்பங்களுக்கு உமது உயிர்ப்பின் பிரசன்னத்தை வெளிப்படுத்தி நிலையான சமாதானம், மகிழ்ச்சி, நம்பிக்கை, அமைதியை கண்டு உணர அருள் புரிய வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாஸ்கா காலம் 4-ம் ஞாயிறு (21.04.2024)**

**திப 4:8-12 1யோவா 3:1-2 யோவான் 10:11-18**

**முன்னுரை**

சுயநல அரசியல் தலைவர்களும், பிரிவினைவாத சிந்தனையைத் தூண்டும் மதத்தலைவர்களும், நமது நாட்டை சின்னாபின்னப்படுத்திக்





கொண்டிருக்கும் இவ்வேளையில் திரு அவை நல்ல ஆயன் ஞாயிறை கொண்டாடுகின்றது. இன்றைய வழிபாடு, ஒரு ஆயன், மேய்ப்பன், வழிகாட்டி, தலைவன் என்பவர்கள் சமய, சமுதாய, அரசியல் சூழலில் எப்படிப்பட்டவர்களாக செயல்பட வேண்டும், மனித குலத்தை எப்படி வழிநடத்த வேண்டும் என்பதை மையப்படுத்துகின்றது. நல்லாயன் இயேசுவின் குணநலன்கள் இரண்டை நம் கண்முன் நிறுத்துகின்றது இன்றைய நற்செய்தி. நல்ல ஆயன் தன் மந்தைக்காக தனது உயிரைத் தருபவன். நல்ல ஆயன் சிதறிப் போன ஆடுகளை ஒன்று இணைப்பவன்.

இத்தகைய இரண்டு குணநலன்களை தமதாக்கி வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. இன்றைய சமூகம் எல்லாத் தளங்களிலும் பிரிந்து கிடக்கிறது. அரசியல் மற்றும் சுய இலாபத்திற்காக மதவெறி மற்றும் சாதி வெறியைத் தூண்டி மக்களைப் பிரித்தாளும் மத அடிப்படைவாத தலைவர்கள் பெருகிக்கொண்டிருக்கிறார்கள். மதவெறியால் மனித நேயமும், சாதிவெறியால் சகோதரத்துவ உணர்வும் குழித் தோண்டி புதைக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட தலைவர்களை அடையாளம் கண்டு புறக்கணிப்பது மட்டுமல்லாமல், ஒன்று படுத்தும் தலைவர்களாக நாம் உருவாவதும் அவசியம். நாம் வாழும் இடங்களில் பிரிந்து கிடக்கும் குடும்பங்களும், பிளவுண்டிருக்கும் மக்களும் ஒன்று சேர்ந்து வாழ நாம் உதவி செய்யும்போது இயேசுவின் தலைமை பண்பில் நாமும் பங்கெடுக்கிறோம் என்ற உண்மையை உணர்ந்து இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு நேற்றும், இன்றும், என்றும் மேய்ப்பனாக, வழிகாட்டியாக, ஆயனாக நம்மை வழிநடத்தி வருகின்றார். அவரே நம்மை ஆதரித்து, அரவணைத்து, வழிகாட்டும் உண்மை மேய்ப்பன் ஆவார். நாம் மீட்படைவதற்கு அவரைத் தவிர வேறு எவர் பெயரும் அருளப்படவில்லை என்கின்றார் புனித பேதுரு. சாதாரண மனிதர்களாகிய நாம் உயரிய உன்னத நிலைக்கு உயர்த்தப்படக் காரணம் நல்ல ஆயனாம் இயேசுவே. நாம் ஒவ்வொருவரும் இறைவனின் பிள்ளைகளாக இயேசுவை நமது நல்ல ஆயனாகவும் கொண்டு வாழ்வோம் அதற்கான இறையருளை வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நாம் ஒவ்வொருவரும் கடவுளின் மக்கள் என்ற பெருமைக்கு அடிப்படை கடவுள் நம்மிடம் காட்டிய அன்புதான் என்று யோவான் தெளிவுபடுத்துகின்றார். தந்தையின் அன்பை, நாம் இயேசு கிறிஸ்துவில்தான் முழுமையாக அறிந்து கொண்டோம் என்கிறார் புனித யோவான். நமது ஊனியல்பின் அடிப்படையில் அல்ல, மாறாக கடவுளின் ஆவியின் துணையால் இறைவனோடு உறவை ஏற்படுத்திக் கொண்டோம்